REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 ஒகஸ்ட் 2 புதன்கிழமை

வரு. 91 இல. 181 | Wednesday 02, August, 2023 | 16பக்கங்கள் | 50/-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில்

## ஐ.தே.க செயற்குழு இன்று சிறிகொத்தவில் கூடுகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அந்த கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. 06

நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்காக

## யாழ். நிலா சுற்றுலா ரயில் சேவை நாளை மறுதினம் 04 முதல் ஆரம்பம்





டிசம்பர் 31ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடைபெறும்

கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை இயக்கப்படும் 'யாழ்நிலா ஒடிசி' விசேட சுற்றுலா ரயில் ஆகஸ்ட் 04 ஆம் திகதி முதல் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான புகையிரத பாதை முற்றிலும் புனரமைக்கப்பட்டதன் பின்னர் காங்கேசன் துறை வரை மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் 06

## எந்த தேர்தலுக்கும் SLPP தயார் நிலையில்

70 வீத தொகுதிகள் மறுசீரமைப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் எந்தவொரு தேர்தலிலும் வெல்ல முடியும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். 06

13ஆவது திருத்தம்; அதனை பலப்படுத்தல்;

## அதிகாரத்தை பகிர்வது குறித்து ஜனாதிபதியின் விசேட உரை

இவ்வார பாராளுமன்ற கூட்டத்தொடரில் நிகழ்த்த தீர்மானம்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலும் அதனை பலப்படுத்துவது தொடர்பிலும் சகல யோசனைகளையும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அதனடிப்படையில் அரசியலமைப்பின் 06

ஜனாதிபதி ரணிலிடம் பிரதமர் மோடி கலந்துரையாடிய விடயமான

# மாகாண தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கவும்



### இந்திய தூதுவரை சந்தித்து தமிழ் கூட்டமைப்பு கோரிக்கை விடுப்பு

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல், அதிகார பகிர்வு என்பன குறித்து இந்திய பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொண்டதை விரைவாக அமுல்படுத்த அழுத்தம் கொடுக்குமாறும் TNA உறுப்பினர்கள் இந்திய தூதுவரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

13 ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்த 06

2022 உடன் ஒப்பிடுகையில் 205% அதிகரிப்பு;

## ஏழு மாதங்களில் 7,63,000 சுற்றுலா பயணிகள் வருகை

800 மில். டொலர்கள் வருமானமாக கிடைத்தது



இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் இலங்கைக்கு 7,63,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் இதன் மூலம் சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார். 06

## 'சினோபெக்' நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் கையிருப்பு தரையிறக்கம்

இரண்டாவது இருப்பு இன்று; விரைவில் 150 நிலையங்களில் செயற்பாடு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



சினோபெக் நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் கையிருப்பு தரையிறக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார். அதேபோல் அதன் 2 ஆவது எரிபொருள் இருப்பு இன்று (02) நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எரிபொருள் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு இறுதி செய்யப்பட்டதன் 06

## கிழக்கு மாகாணத்திற்கு உதவ முன்வந்துள்ள அவுஸ்திரேலியா!

ஆளுநர் செந்திலை சந்தித்த தூதுவர்கள் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளது. உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் ஆகியோருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்ட கலந்துரையாடலின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலின் போது இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை, மீன்பிடி துறை, கனிம வளம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமை ஹைதரசன் போன்ற திட்டங்களை கிழக்கு மாகாணத்தில் முன்னெடுப்பதற்கு அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார்.

இந்திய நன்மைகளை இலங்கை பெற

## இரு நாடுகளுக்கிடையே தரைத்தொடர்பு அவசியம்

தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு



இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலிருந்து எமது நாடு பயன்பெற இரு நாடுகளுக்கிடையே தரைத்தொடர்பு அவசியம் என இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

தரைப்பாலங்களை அமைப்பதன் மூலம் இருநாடுகளின் 06

## சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு அவசியம்

அறிக்கையிட்டு சுமந்திரன் MP வலியுறுத்து



1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான 06

## இந்திய தூதுவருடன் தமுகூ வெள்ளி சந்திப்பு

TPA சகல எம்பிக்களும் கலந்து கொள்வர்



தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இந்திய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 4ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்திய தூதுவரின் அழைப்பை ஏற்று 06

## கோழி இறைச்சி விலை ரூ.100 ரூபாவால் குறைகிறது

உற்பத்தியாளர் இணக்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய கோழி இறைச்சி உற்பத்தி கைத்தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர். மேற்படி உள்ளூர் 06

QR குறியீடு அறிமுகத்தினால் நாட்டில்

## எரிபொருள் பாவனை 50 வீதத்தால் வீழ்ச்சி

இறக்குமதி செலவும் குறைவடைந்தது - CPC

தேசிய எரிபொருள் அனுமதி அல்லது QR குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையில் மாதாந்த எரிபொருள் பாவனை 50% குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 06

தேசிய கீதம் திரிபுபடுத்தி பாடிய விவகாரம்;

## CID யினரால் விசேட விசாரணைகள் ஆரம்பம்

பல முறைப்பாடுகளையடுத்து நடவடிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



எல்.பி.எல் தொடரின் தொடக்க விழாவில் தேசிய கீதம் திரிபுபடுத்தப்பட்டு பாடப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

மியன்மாரின் முன்னாள் அரச தலைவர்

## ஆங் சான் சூகிக்கு ஐந்து வழக்குகளில் மன்னிப்பு



மியன்மாரின் முன்னாள் அரசுத் தலைவர் ஆங் சான் சூகிக்கு 5 வழக்குகளில் இராணுவ ஆட்சியாளர்களால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் நேற்று தெரிவித்துள்ளன. மியன்மார் அரச நிர்வாகத் தலைவரினால் 5 வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு 06

வவுனியா தோணிக்கல் தம்பதி எரித்து கொலை;




வவுனியா தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வீட்டிற்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் CCTV 06




நாடளாவிய ரீதியாக ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான அறுபத்து மூன்று பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 32 சதவீதமாக 06

## 18 நிமிடங்களில் 02 Km தூரத்தை நடந்து சாதனை

மஸ்கெலியாவில் மூன்று வயது சிறுமி உலக சாதனை



நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டத்தில் வசிக்கும் சிறுமியொருவர் 18 நிமிடங்களில் 02 கி.மீ தூரத்தை 06

120 பேருடன் பயணித்துக்கொண்டிருந்தபோது

## வட்டவளையில் பத்து அடி பள்ளத்தில் வீழ்ந்த பஸ்

18 பேருக்கு படுகாயம்; நேற்று அதிகாலை சம்பவம்

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**





கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று அட்டன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை சிங்கள வித்தியாலயத்திற்கு அருகில் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. கொழும்பிலிருந்து நள்ளிரவு 12 மணியளவில் பயணிகளை ஏற்றிக் கொண்டு நுவரெலியா பகுதிக்கு சென்ற குறித்த பஸ் நேற்று 06

# அஸ்ஸெய்யத் அபீபுத்தீன் மௌலானா இலங்கைக்கு விஜயம்

தாருல் ஜைலானி உலக அமைப்பின் ஆன்மீகத் தலைவர், அஷ் ஷேய்ஹ் அஸ்ஸெய்யத் அபீபுத்தீன் மௌலானா அல்காதிரி மற்றும் அவரது புதல்வர் அஸ்ஸெய்யத் அப்துர் ரஹ்மான் மௌலானா அல்காதிரி அல்ஜீலானி ஆகியோர் திங்கட்கிழமை (31) இலங்கை வந்தடைந்தனர்,

தெனகம தம்மாராம நாயக்க தேரர், அஸ்ஸெய்யத் நகீப் மௌலானா ஜமல்அல்லைல், அஸ்ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி, கலாநிதி நளின் ரமேஷ் அமரசிங்ஹ, அஸ்ஸெய்யத் ஹனீப் மௌலானா அல்காதிரி, மொஹிதீன் காதர், ஹாரூன் காதர், ஹசன் மௌலானா மற்றும் தாருல் ஜைலானி இலங்கைக் கிளையின் முஹிப்பீன்



கள் ஆகியோர்,அவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்று அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

# மாளிகாவத்தை மையவாடியில் தொழுகை மண்டபம் திறந்து வைப்பு

(ருஸைக் பாரூக்)



மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் தொழுகைக்கென, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழுகை மண்டபம் அண்மையில் (30) ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டது. இத்தொழுகை அறை உம்மு சாவியா பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் செயலாளர் பாரிஸ் பஹ்மி வரவேற்புரை நிகழ்த்தினார்.

உம்மு சாவியா அஜ்வாத் அல் பஸ்ஸி அரபிக் கல்லூரி அதிபர் கலீபத்துஷ் ஷாஸுலி அஹமத் சூபி மஹ்லரி மற்றும் உம்மு சாவியா தலைவர் தேசபந்து மேக்கி ஹாஷிம் ஆகியோர் இதில் உரையாற்றினர்.

விஷேட துஆ பிரார்த்தனையை, கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறை குழுத் தலைவர் மௌலவி எம்.பி.எம். ஹிஷாம் நிகழ்த்தினார்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, எஸ்.எம்.மரிக்கார், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி, கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன், பள்ளிவாசல்களின் தலைவர்கள் , அரபிக் கல்லூரி அதிபர்கள், உலமாக்கள் உள்ளிட்ட பலரும் இதில், கலந்துகொண்டனர்.

# வெலிகமவில் கல்விக் கருத்தரங்கு

(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம அறபா தேசிய பாடசாலை பழைய மாணவர் குழுக்களில் ஒன்றான அறபா 91 நலன்புரிச் சங்கம் கல்விக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கல்விக் கருத்தரங்கு வெள்ளிக்கிழமை (04) காலை 8.00 மணிக்கு பாடசாலை வபா மண்டபத்தில் நடைபெறுகிறது. பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். முதஹ்கரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், அறபா பழைய மாணவர்களான வைத்தியர் எம்.எப்.எம். இம்தியாஸ் மற்றும் வைத்தியர் எம். இஸட். எம்.திஹான் ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்று விரிவுரையாற்ற உள்ளனர். அறபா தேசிய பாடசாலை தரம் 10,11,12 ஆம் தரம் மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த கருத்தரங்கில், அறபா 91 பழைய மாணவர் சங்கத்தின் இணைச் செயலாளர் ஊடகவியலாளர் எம்.எஸ்.பாஹிம் வரவேற்புரை நிகழ்த்துவார். பாடசாலை அதிபரின் உரையும் இடம்பெற உள்ளது. இதனைத் தொடர்ந்து கம்பியூட்டர் விசன் சிண்ட்ரோம் என்ற தலைப்பில் வைத்தியர் எம்.எப்.எம். இம்தியாஸின் உரை இடம் பெறும். நினைவாற்றலுக்கான கருவிகளும் நுட்பங்களும் என்ற தலைப்பில் வைத்தியர் எம். இஸட். எம்.திஹான் உரையாற்றுவார். கருத்தரங்குடன் தொடர்புடையதாக மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. நன்றியுரையை அமைப்பின் தலைவர் எம். இஸட்.எம்.அர்பத் நிகழ்த்துவார்.

அறபா 91 நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலுடன் இணைந்ததாக இந்த கருத்தரங்கு முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் (சுபாவித கீ) எனும் இசை நிகழ்ச்சி (28) வெள்ளிக்கிழமை காலை கொழும்பு நாலந்தா கல்லூரியின் மலலசேகர கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.கல்லூரி அதிபர்,யூ .டி.இரான் சம்பிக டி சில்வா முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பங்கு பற்றிய மாணவருக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பாடசாலை அதிபருடன் இனைந்து பரிசு வழங்குவதை காணலாம்.

# வை,எம்,எம்,ஏ,பேரவையில் முப்தி முயீனுக்கு முக்கிய பதவி

(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)



அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கப் பேரவையின் (YMMA) இளைஞர் வலுவூட்டல் மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான தேசிய உபகுழுவின் தலைவராக முப்தி முயீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐந்தாவது இளைஞர் பாராளுமன்றத்தின் உறுப்பினரான இவர்,2023/2024 வருடங்களுக்கான தலைவராகவே நியமிக்கப்பட்டுள்ளார். வை,எம்,எம்,ஏ,தலைமையகம் இவருக்கு இப்பதவியை வழங்கியுள்ளது.

களுத்துறை வை.எம்.எம்.ஏ கிளையின் செயலாளரான இவர், இளைஞர் பாராளுமன்றில் களுத்துறை இணைப்பு அமைச்சராகவும் உள்ளார்.

களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பதில் செயலாளராகவும், கொழும்பு றோயல் கல்லூரி யூனியனில் 2016 ஆம் வருட குழாம் உறுப்பினரகவும் மற்றும் பல்வேறு அமைப்புக்களிலும் இவர்,செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கப் பேரவையின் தேசிய தலைவர் இஹ்ஸான் ஏ.ஹமீத், முப்தி முயீனிடம் கடிதத்தை வழங்கி வைத்தார்.



சாஸ்திரப்பதி பண்டிதர் வணக்கத்திற்குரிய கடவல கெதர விமலரத்தின தேரர் 'சந்தர்ம கீர்த்தி ஸ்ரீ விமலரத்ன' என்னும் கௌரவப் பெயருடன் சத்கோரள மஹாதிஸாவையின் நீதிமன்ற உப தலைமை சங்கநாயக்கராக பதவி ஏற்றுக் கொண்டதன் நிமித்தம் தேசபந்து ஓய்வுப்பெற்ற கிராம உத்தியோகத்தர் சமாதான நீதவான் மௌலவி அபூபக்கர் பஹ்ஜி தலைமையில் மடிகே மிதியால முஸ்லிம் சமூகத்தால் மடிகே மிதியால கிராமத்தில் விசேட வரவேற்பும் அளிக்கப்பட்டு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு வந்துரெச, ஹிதகஹவெவ, மிதெல்லவ, லோகுருகம, ஹபவத்தை ஆகிய கிராமங்களின் சிங்கள மக்களும், மடிகே மிதியால ஜும்மா பள்ளியின் அறங்காவலர் குழு தலைவர் உள்ளிட்ட ஏனைய அங்கத்தவர்களும், ஜனாஸா நலன்புரி சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களும், ஜாமியத்துல் உலமா சபையின் தலைவர், அங்கத்துவ மௌலிமார்களும் கலந்து கொண்டனர்.





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பௌர்ணமி தினமான நேற்று வழிபாட்டில் கலந்து கொண்டார். வழிபாட்டு நிகழ்வின் பின் தர்மகர்த்தா தெ. பிரம்மநாயகம் ஆளுநரை கௌரவிப்பதையும், தர்மகர்த்தா மணி சுப்பிரமணியம், விநாயகம் கதிரவேல் ஆகியோருடன் எடுத்துக் கொண்ட படம்.

# அமெரிக்க சீக்கியர்கள் காலிஸ்தான் தீவிரவாதத்துக்கு ஆதரவானவர்கள் அல்ல

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வசிக்கும் பஞ்சாபிகள் அனைவரும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் அல்ல, அவர்களில் ஒரு சிறு பகுதியினரே தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் என்று இந்திய அமெரிக்கரான காங்கிரஸ் உறுப்பினர் செனட்டர் ராஜா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் 'கில் இந்தியா' என்ற கோஷத்தோடு பேரணி நடத்தியமை, லண்டன் இந்திய தூதரகத்தில் புகுந்த காலிஸ்தான் தீவிரவாதிகள் பொருட்களை அடித்து நாசமாக்கியதோடு இந்திய தேசிய கொடிக்கு அவமரியாதை செய்தமை, சான்பிரான்சிஸ்கோ இந்திய தூதரக அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியமை போன்ற அதிகரித்துவரும் காலிஸ்தான் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே இலினொயிஸ் மாகாண காங்கிரஸ உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

பஞ்சாபிய செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கும் கல்சா வொக்ஸ் என்ற இணைய இதழ் இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

சீக்கிய அமெரிக்கர்கள் தீவிரவாதிகளான சீக்கியர்களின் செயல்களுக்கு பொறுப்பாளிகளாக மாட்டார்கள் என்றும் அவர்கள் வன்முறைக்கு ஆதரவானவர்கள் அல்ல என்றும் தெரிவித்துள்ள கிருஷ்ணமூர்த்தி, சமாதான தீர்வே அவசியம் என வலியுறுத்தியதோடு காலிஸ்தான் வன்முறைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்தார்.

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் பிரிக்ஸ் உச்சி மாநாடு;

# மாற்று பொருளாதார வலயத்தை உருவாக்கும் என எதிர்பார்ப்பு

பிரிக்ஸ் நாடுகளின் 15ஆவது உச்சி மாநாடு எதிர்வரும் 22 முதல் 24 வரை தென்னாபிரிக்காவின் ஜோஹன்னஸ் பேர்க் நகரில் நடைபெறவுள்ளது. பிரெசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நான்கு நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பில் தென்னாபிரிக்கா 2010ஆம் ஆண்டு இணைந்து கொண்ட பின்னர் இந்த அமைப்பு 'பிரிக்ஸ்' என அறியப்பட ஆரம்பித்தது.

பிரிக்ஸ் நாடுகளில் 3.2 பில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இது உலக சனத்தொகையின் 42 சதவீதமாகும். உலகின் மொத்த சுதேச உற்பத்தியில் பிரிக்ஸ் நாடுகளின் பங்களிப்பு 27 சதவீதமாகும். மொத்த உலக வர்த்தகத்தில் 18 சதவீதம் பிரிக்ஸ் நாடுகளுடையதாகும். மேலும் உலக பொருளாதார வளர்ச்சியில் 50 சதவீதத்தை இந்நாடுகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன. பிரிக்ஸ் நாடுகள் புதிய அபிவிருத்தி வங்கி என்ற வங்கியமைப்பை ஏற்படுத்தியுள்ளன. ஐம்பது பில்லியன் டொலர் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வங்கி உலக வங்கி, சர்வதேச நாணய சபை என்பனவற்றுக்கு மாற்றானது எனக் கூறப்படுகிறது. உறுப்பு நாடுகளின் நிதித் தேவையை விரைவாக வழங்கக்கூடியதாக இவ் வங்கி உள்ளது. இதுவரை உறுப்பு நாடுகளின் 96 திட்டங்களுக்கு இவ் வங்கி 32.8 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2021 இல் எகிப்து, ஐக்கிய அமீரகம், வங்கதேசம், உருகுவே ஆகிய நாடுகளும் பங்கு கொள்வனவு மூலம் வங்கியின் உறுப்பு நாடுகளாகி உள்ளன.



அரச அங்கீகாரம் பெற்ற MUGP ORGANIZATION அமைப்பினால் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) ஸுஹைர் ஹஜ் முகவர் (SUHAIR HAJJ TRAVELS) நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் HTOA உறுப்பினரும் தர்கா நகர் இஸ்லாமிய நலம்புரிச் சங்கத்தின் தலைவரும் (PRESIDENT ISLAMIC WELFARE ASSOCIATION DHARGA TOWN)) அகில இலங்கை சமாதான நீதவானும் முன்னாள் தர்கா நகர் ஷேக் தாவூத் வலியுல்லாஹ் தக்கியா நம்பிக்கையாளர் சபை தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான அல்ஹாஜ் ஏ. பீ. எம். ஸுஹைருக்கு அவருடைய சமூக சேவையை பாராட்டி 'சமாஜஸேவ விபூசனகீர்த்தி ஸ்ரீ தேசபந்து' கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அமரபுர ஸ்ரீ ஸத்தாதம்மவன்ஸ நிகாயாவின் பிரதி அதிபதி பெங்கமுவே நாலக தேரோ ஸுகைர் ஹாஜியாருக்கு பட்டச் சான்றிதழை கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: பேருவளை விசேட நிருபர்)

# சிறுநீரகம் தேவை

பேருவளை சீனன் கோட்டை ஸேர்கியுலர் வீதி, 9/2 என்ற முகவரியில் வசிக்கும் முஹம்மத் ரிம்ஸான் முஹம்மத் ரிஸாமத் சிறுநீரக நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு தற்போது வாரத்திற்கு இரு முறை இரத்த மாற்றுச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி விஷேட வைத்திய நிபுணர் செல்வராஜ் மத்து இவருக்கு அவசரமாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும் என அறிவித்துள்ளார். 21 வயதுடைய இந்த இளைஞனுக்கு வயது 24 – 40க்கும் இடைப்பட்ட O+ சிறுநீரகமொன்று அவசரமாக தேவைப்படுகிறது. இந்த இளைஞனின் உயிரைக்காக்க சிறுநீரகம் தானம் செய்ய விரும்புபவர்கள் 0773675552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவரது தந்தை கேட்டுள்ளார்.

# சேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மைதானத்தில் மாபெரும் பரிசளிப்பு விழா



அதிபர்
எஸ்.ஆர் குமார்



ஒருங்கிணைப்பாளர்
சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம்.முக்தார்



ஏற்பாட்டுக்குழுத் தலைவர்
சமூக சேவையாளர்
எம். பாஸி ஸுபைர்



மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.ஆர் குமார் தலைமையில் தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டை முன்னிட்டு 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் மாபெரும் நிகழ்வு பேருவளை மாளிகாசேனை சேம் ரிபாய் ஹாஜியார் விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை (3) 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்தோடு பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி,பேருவளை மாளிகாசேனை கிங் பிஷர் கிரிக்கெட் அணிக்கும் பேருவளை மருதான கிரேட் போய்ஸ் அணிக்கும் இடையிலான 5 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழா சமூக சேவையாளர் எம். பாஸி ஸூபைரின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 2 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.44
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆடி 17
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# மாதாந்த ஏற்றுமதி வருமானம் 01 பில். டொலரை விட அதிகரிப்பு

**6 மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 2823 மில். டொலர்கள் நாட்டுக்கு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாதாந்த ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலரை விட அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் மொத்தமாக 5.9 பில்லியன் அமெரிக்கன் டொலராக காணப்படுவதாகவும் அந்த வகையில் கடந்த மே மாதத்தில் ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியனாக காணப்பட்டதுடன் ஜூன் மாதத்திலும் அதே போன்று ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலர்களை விட அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதை வேளை கடந்த ஜூன் மாதம் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் 123 மில்லியன் டொலராக இருந்துள்ளதுடன் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 173 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 2,823 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள் மூலமாக நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

# நாடளாவிய சிறைச்சாலைகளில் 29,000 சிறைக் கைதிகள் தடுத்துவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய சிறைச்சாலைகளில் 29,000ற்கும் அதிகமான சிறைக்கைதிகள் காணப்படுவதால் சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதலே பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் சிறைச்சாலைகளுக்கு வரும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து வருவதாகவும் அதற்கிணங்க அந்த அதிகரிப்பு நூற்றுக்கு 200 வீதமாக காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. நாடளாவிய அனைத்து சிறைச்சாலைகளிலுமாக 13,241 சிறைக் கைதிகளையே தடுத்து வைக்க முடியும் என்ற நிலையிலும் தற்போது அந்த சிறைச்சாலைகளில் சுமார் 19,000 சந்தேக நபர்களான கைதிகளும் 10,000 சிறைக் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை காரணமாக சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலை காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

---

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## தென் மாகாண சபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**காலி மாவட்டத்திலுள்ள 200 பாடசாலைகளில் நவீன கணனி ஆய்வுகூடம் மற்றும் Customized Curriculum Software உடனான Smart Boards களை ஸ்தாபித்தல் (இந்திய குடியரசினால் நிதியிடப்பட்டது)**

**ஒப்பந்த விபரம்: SPC/PROC/GOODS/2022/NCB/01**

விநியோக அட்டவணையின் பிரகாரம் காலி மாவட்டத்தில் உள்ள நவீன காணி ஆய்வுகூடம் மற்றும் Customized Currieulum Software உடனான Smart Boards களை ஸ்தாபிப்பதற்கான தகைமையும், தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் தென் மாகாண சபையின் சார்பாக திட்ட பெறுகைக் குழு (CSPPC) பிரதம செயலகத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. தேவைப்படும் தகைமைகளின் உள்ளடக்கம்.
   a. இலங்கை அல்லது இந்தியாவில் ஓர் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக இருத்தல்
   b. விலைமனுக்கள் ஓர் உற்பத்தியாளர் அல்லது வழங்குநர்கள மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் இலங்கையில் ஒரு நிறுவப்பட்ட சேவை வழங்குநராக இருத்தல் வேண்டும்.
   c. 2018.04.01 முதல் 2023.03.31 இற்கு இடைப்பட்ட கடந்த ஐந்து ஆண்டுகளில் விற்பனையில் குறைந்தபட்ச சராசரி வருடாந்த புரள்வு இ.ரூபா 300 மில்லியனாக இருத்தல் வேண்டும். (இந்திய வழங்குநர்களுக்கு தொகை 67 மில்லியன் இந்தியன் ரூபா) விலை மனுதாரர் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்று மற்றும் நிதி திறனை உறுதி செய்வதற்காக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட ஆவண சான்றுகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   d. விலைமனுதாரர் இலங்கையில் அல்லது இந்தியாவில் தேவைப்பாடு அற்ற வகையில் (SOR) குறிப்பிடப்படும் பொருட்களின் விற்பனை மற்றும் சேவையில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   e. விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாது இருத்தல் வேண்டும்.
   f. குறைந்த பட்சம் இ. ரூபா 100 மில்லியன் ஓர் மொத்த பெறுமதியுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு ஓரளவு சமமான தன்மையுடைய திட்டத்தை செயற்படுத்த அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும். (இந்திய வழங்குநர்களுக்கு இந்திய ரூபா 23 மில்லியன் ஓர் மொத்த பெறுமதியுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்த பட்சம் ஒரு ஓரளவு சமமான தன்மையுடைய திட்டத்தை செயற்படுத்திய அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   g. 48 மணி நேரத்திற்குள் விநியோக அட்டவணையின் பிரகாரம் உத்தேச பாடசாலைகளுக்கு குறித்த உத்தரவாத காலத்திற்கு தொடரான தொழில்நுட்ப சேவைகள் மற்றும் காப்புத் தீர்வுகள் வழங்குவதற்கான திறனை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
2. 2023 செப்டெம்பர் 11 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்கும் ஓர் மீளளிக்கப்படாத இ. ரூபா 40,000 செலுத்துவதன் பேரில் மற்றும் கீழேயுள்ள முகவரிக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனு தாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முடியும்.
3. விலைமனுதாரர் ஒவ்வொரு பொதிக்கும் ஓர் காசு வைப்பின் மூலம் அல்லது இலங்கையில் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கி உத்தரவாதத்தின் மூலம் அல்லது இலங்கையில் இயங்கும் உள்ளூர் வர்த்தக வங்கியின் மூலம் உறுதி செய்யப்பட்ட வெளிநாட்டு வங்கியின் மூலம் சுயதரவு தாளில் குறிப்பிடப்பட்டவாறு 2024 ஜனவரி 08 வரை செல்லுபடியாதல் மற்றும் தென் மாகாண பிரதம செயலாளரின் பெயரில் வழங்கப்பட ஓர் விலைமனுப் பிணையை இணைத்தல் வேண்டும்.

| பொதி இல. | உருப்படி விபரம் | எண்ணிக்கை | தேவைப்படும் விலைமனுப் பிணை இ. ரூபாவில் எனில் | தேவைப்படும் விலைமனுப் பிணை அ.டொலரில் எனில் |
|---|---|---|---|---|
| 01 | 65-inch 4K Smart board (LEDLI GHTING) without OPS and with Moving stand + UPS | 200 | 1,200,000.00 | 3860 |
| 02 | Tablet Computer Screen Size (8 inches) OR-Higher RAM 4GB UP | 2200 | 1,600,000.00 | 5144 |
| 03 | 10-port USB Charging Stotion | 200 | 100,000.00 | 321 |
| 04 | WI-Fi access point for 30 SUER | 200 | 100,000.00 | 321 |

4. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் பிரதி என வெவ்வேறாக பொறியிடப்பட்ட உறைகளில் உள்ளடக்கப்பட்டு மூலப்பிதி மற்றும் பிரதி என குறிப்பிடப்பட்டு பின்னர் ஒரு தனி உறையில் உள்ளடக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 12 பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக விலைமனுதாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். எல்லா விலைமனுவுடனும் சுயதரவு தாளில் குறிப்பிடப்படும் தொகையில் ஓர் விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும். விலைமனுவில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலைப்பு தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. விலைமனு தரவு தாளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓர் இடத்தில் 2023 செப்டெம்பர் 01ம் திகதி விலைமனுவுக்கு முன்னரான கருத்தரங்கு நடைபெறும்.
6. மேலே சொல்லப்பட்ட முகவரியானது தலைவர், பிரதம செயலகம், திட்டப் பெறுகைக் குழு, பிரதம செயலகம், S.H. தஹநாயக்க மாவத்தை, காலி ஆகும்.
7. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் கீழே தரப்படும் முகவரியில் வேலை நாட்களில் 2023. செப்டெம்பர் 11ம் திகதி அல்லது அதற்கு முன்பு மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம். மற்றும் தென் மாகாணம் பிரதம செயலகம் வழங்கல்கள் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களை மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதம செயலகம்,**
**தென் மாகாணம்,**
**S. G. தஹநாயக்க மாவத்தை, காலி.**
**தொ. பே. 091-4944022, 091-2246904**
**Email chifsecl@sltnet.lk**

**தலைவர்,**
**பிரதம செயலகம் திட்ட பெறுகைக்குழு,**
**பிரதம செயலகம், தென் மாகாணம்,**
**S.H. தஹநாயக்க மாவத்த, காலி.**

2023 ஓகஸ்ட் 02

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (தீ கண்டுபிடிப்பு) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLA/EE/EW/ECT/ELV/01)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (தீ கண்டுபிடிப்பு) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/01) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு தீ கண்டுபிடிப்பை வழங்குதல், நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.

   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM4 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 7 வருடங்களில் 10 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 7 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 25 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 10 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 15,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து 'கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (தீ கண்டுபிடிப்பு) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/01) எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 100,000.0 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.02.05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023.09.11ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.

    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**கீழ்நிலை பெறுகைக் குழு - A,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (PRECISIONAC) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/02)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (PRECISIONAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு கட்டிட முகாமைத்துவ சேவைகள் (BMS) வசதிகள் சகிதம் சேமிப்பு அறைக்கு துல்லியமான வகையான (PRECISION TYPE) வளிச்சீராக்கிகளை வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.

   நிர்மாணக் காலம் 60 நாட்களாகும்
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM1/ EM2 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 10 வருடங்களில் 120 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்திருத்தல் வேண்டும் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 10 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 480 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 170 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.11ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து 'கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01) எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 1,700,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.02.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023.09.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.

    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 17ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 14

## குறள் தரும் சிந்தனை



சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்

புகழ்மிக்க வீர வாழ்க்கையை விரும்புகின்றவர், தனக்கு எப்படியும் புகழ் வரவேண்டுமென்பதற்காக மான உணர்வுக்குப் புறம்பான காரியத்தில் ஈ.டுபட மாட்டார்.

# வரட்சியை சமாளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம்

நாட்டில் பல வருடங்களுக்குப் பின்னர் வழமைக்கு மாறான வரட்சிக் காலநிலை ஏற்பட்டுள்ளது. இக்காலநிலையின் விளைவாக பல்வேறு மட்டங்களிலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இது குறித்து பலதரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர். இவ்வரட்சிக் காலநிலையின் விளைவாகத் தண்ணீர் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்ட பல பிரச்சினைகள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் நிலவவே செய்கின்றது.

இவ்வரட்சிக் காலநிலைக்கு காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமே மூலகாரணமாகும். இதனைத் தவிர வேறு பிரச்சினை இல்லை என்பதுதான் காலநிலை தொடர்பான நிபுணர்களின் கருத்தாகும்.

அதேநேரம் காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள இவ்வரட்சிக் காலநிலை இலங்கைக்கு மாத்திரமுரிய பிரச்சினை அல்ல. இப்பிரச்சினைக்கு எல்லா நாடுகளும் முகம்கொடுத்துள்ளன.

அதனால் இவ்வரட்சி காலநிலைக்கு முன்பாக தண்ணீரை முகாமைத்துவத்துடன் பயன்படுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. ஏனென்றால் தண்ணீர் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களதும் இருப்புக்கும் உயிர்வாழ்வுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். அதனால் அதனைப் பாதுகாப்பதும் முகாமைத்துவம் செய்வதும் மிகவும் முக்கியமானது.

தற்போது நாட்டில் வரட்சிக் காலநிலையின் விளைவாக நீரேந்து பிரதேசங்களிலும் நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் பெரிதும் வற்றிக்குறைவடைந்துள்ளது. குறிப்பாக முக்கிய குளங்கள் உட்பட மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் மட்டம் தொடர்ந்தும் குறைவடைந்து வருகின்றது.

இந்த வரட்சிக் காலநிலை நீடிக்குமாயின் மின்னுற்பத்திக்கும் உணவுப் பயிர்ச்செய்கைக்கும் தண்ணீரை வழங்குவதில் நெருக்கடிகள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை மகாவலி அதிகார சபை, எதிர்காலத்தில் மின்வெட்டை நடைமுறைக்கு கொண்டு வரக்கூடிய நிலைமையும் ஏற்படலாம் என்று கூறியுள்ளது.

தற்போது மகாவலி நீர்த்தேக்கங்கள் பலவற்றில் தண்ணீர் மட்டம் 50 வீதம் குறைவடைந்துள்ளது. சமநலவெவ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 87.9 மில்லியன் கனமீற்றர் வரை வீழ்ச்சியடைந்திருக்கிறது. இவ்வரட்சி காலநிலை மேலும் பத்து நாட்களுக்கு நீடிக்குமாயின் இந்நீர்க் கொள்ளளவு 60 மில்லியன் கன மீற்றர்கள் வரை குறைவடைந்துவிடும் என்று மின்சார சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இவை இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள பெரும்பாலான குளங்களதும் நீர்த்தேக்கங்களதும் நீர்மட்டமும் பெரிதும் குறைவடைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ள நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், இந்நிலை நீடிக்குமாயின் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையைப் பாதிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பெரும்போக நெற்செய்கையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, இவ்வரட்சி காலநிலையினால் யால, வில்பத்து, குமன, உடவளவ ஆகிய வனாந்தரங்களில் காணப்படும் உயிரினங்களும் பல்வேறு விதமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக இவ்வனாந்தரங்களிலுள்ள நீரேந்து பிரதேசங்களின் தண்ணீர் பெரிதும் வற்றிப் போயுள்ளது. நீர்ப் பற்றாக்குறையோடு அதிக உஷ்ண நிலை ஏற்பட்டுள்ளதோடு உணவுப் பற்றாக்குறைக்கும் வன சீவராசிகள் முகம் கொடுத்திருப்பதாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் நாயகம் சந்தன சூரிய பண்டார கூறியுள்ளார். இந்நிலையில் யால வனாந்தரத்திலுள்ள வன சீவராசிகளுக்கென பவுஸர்களில் நீர் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள தாக்கங்களும் பாதிப்புகளும் சாதாரணமாக நோக்கப்படக் கூடியவை அல்ல. இந்த வரட்சிநிலை சில சமயம் உணவு நெருக்கடிக்குக் கூட இட்டுச் செல்ல முடியும். அதேநேரம் மனிதன்_வனசீவராசிகள் மோதல்களையும் கூட தோற்றுவிக்கலாம்.

அதன் காரணத்தினால் தற்போதைய வரட்சிக் காலநிலை சூழலில் தண்ணீர் வீண்விரயம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதில் உட்பட்ச கவனம் செலுத்த வேண்டும். தண்ணீர் காணப்படும் பிரதேசங்களில் உணவுப் பயிர்ச்செய்கைகளை உரிய முறையில் முன்னெடுக்கவும் தவறக்கூடாது. அத்தோடு தண்ணீரை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து பயன்படுத்துவதும் மிக முக்கியமான விடயமாகும். தவறும் பட்சத்தில் குடிநீருக்கும் கூட தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலவிக் கொண்டிருக்கின்றது.

ஆகவே வரட்சிக் காலநிலைக்கு மத்தியில் தண்ணீரை முறையாகவும் ஒழுங்கு முறையாகவும் முகாமை செய்து பயன்படுத்த வேண்டும். இதில் ஒவ்வொருவரும் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வரட்சியின் விளைவான பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் முகம்கொடுப்பதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

editor.tkn@lakehouse.lk

# பதில் அதிபர்கள் விவகாரத்துக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்படுவது அவசியம்!

இலங்கையின் கல்வித்துறை வளர்ச்சியில் பாடசாலைகளில் 'கடமை நிமித்தம் கடமை நிறைவேற்று அதிபர்கள்' என்ற சொற்றொடரில் பதில் அதிபர்கள் மிக முக்கிய பங்களிப்பு செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சீ.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கர அவர்களி பின்னரான கல்வி முறையில் பாடசாலைகளை தாங்கிப்பிடித்து வந்துள்ளவர்களாக இந்த பதில் அதிபர்களே காணப்படுகிறார்கள். இவ்வாறு பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களே பெரும்பாலும் இலங்கை அதிபர் சேவைத் தரத்திற்குள் உள்வாங்கப்பட்டார்கள்.

அவர்களில் பலர் அதிபர் தரம் 1. 2 ஆகியவற்றிலும், கல்வி நிர்வாக சேவையிலும் உயர்வு பெற்றவர்களாகவும் பதவியில் உள்ளனர். பலர் ஓய்வு பெற்றுள்ள நிலையில் அவர்களுடைய சேவை குறித்த அவதானத்திலும் பதில் அதிபர்கள் என்ற நிலையில் இருந்தே நோக்கப்பட வேண்டியுள்ளது. 1815/ 31 இலக்க 22.10.2014 ஆம் திகதியஇலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு நடைமுறையிலுள்ள நிலையிலும் இன்று வரையில் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் அரச பாடசாலைகளில் மூன்றிலொரு பாடசாலைகள் பதில் அதிபர்களின் நிர்வாகத்தின் கீழே இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கல்வித்துறையில் தவிர்க்க முடியாத அங்கமாகவே பதில் அதிபர்கள் திகழ்கிறார்கள். கஷ்டப் பிரதேச, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளின் நிர்வாகத்துக்கு பொறுப்பாகவே பதில் அதிபர்கள் சேவையில் உள்ளனர். பதில் அதிபர்கள் இல்லாவிட்டால் பல பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிக சவாலான சூழ் நிலையில் இவ்வாறான பாடசாலைகளை காப்பாற்றி வருபவர்கள் பதில் அதிபர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பதில் அதிபர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை மதித்தும், அவர்கள் கல்விப் புலத்தில் வைத்துள்ள நம்பிக்கையை மதிக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். எனவே இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பில் மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும். தற்போதுள்ள அதிபர் பிரமாணக்குறிப்பின்படி நீண்ட காலம் சேவையை வழங்கிய பதில் அதிபர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இப்பாதிப்பு நிலையை உணர்ந்து கொள்கை வகுப்பாளர்கள், தொழிற்சங்கங்கள் தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். இத்திருத்தங்கள் ஊடாக பதில் அதிபர்களி சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விடயங்களும் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

2. 180 நாட்கள் கடமையில் இருந்தால் பதவி விலக்க முடியாது என்ற நியமமும், இவ்விடயம் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக் குழுவின் சிபாரிசும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

3. மேற்குறித்த பிரமாணக்குறிப்புக்கமைய பரீட்சை மூலமே இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டுமானால் பரீட்சைகளை நடத்தியிருக்க வேண்டும். பரீட்சையில் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக 2019 ஆம் வருடம் தெரிவு செய்யப்படாமல் பரீட்சையில் சித்தி பெறத்தவறியவர்களைக் கொண்டு வாய்ப்பை வழங்க எடுக்கும் முயற்சி பிரமாணக் குறிப்பிற்கு முரணானதே.

5. சுற்றுநிருப இலக்கம் 16/20172017 இன்படி பெப்ரவரி 07 ஆம் திகதியுடைய அமை.ப/17/0105/742/002 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்திலிருந்து கிடைத்த அனுமதியின் பிரகாரம் அதிகரித்த விசேட கொடுப்பனவு திருத்தம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. 'மேற்படி திருத்தம் செய்யப்பட்ட கொடுப்பனவு, அதிபர்களாக சேவையாற்றுகின்ற மற்றும் அப்பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்படுவதோடு அதனை 2017 மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்' என்ற விடயம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கொடுப்பனவு மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மாறாக மத்திய மாகாணம், கிழக்கு மாகாணங்களில் இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதும் அதிபர்களுக்கான கொடுப்பனவாக வழங்கப்பட்ட ரூபாய் 300 இடைநிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இக்கொடுப்பனவு நிலுவைத் தொகையுடன் வழங்கப்படல் வேண்டும்.

6. அவி21/0320/308/016 இலக்க மற்றும் 2021.03.01ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய இலங்கை அதிபர் சேவையில் தரம் 111 இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் 2021/2022 இற்கு அமைய கோரப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

7. தர அதிபர்களுக்கு சமமான வகையில் பாடசாலைகளில் பணிகளை முன்னெடுப்பதோடு அரச, அரச நிறுவன தொடர்பான பணிகளில் பதில் அதிபர்களின் பணிகளும் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வங்கிகள், தேர்தல் திணைக்களம், பரீட்சை திணைக்களம், ஆட்பதிவுத்திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களில் எமது பதவி நிலை அங்கீகரிக்கப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது. சமூகநிலை என்ற வகையிலும், மனநிலை என்ற வகையிலும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை கட்டியெழுப்பிய சாரார் என்ற வகையில் பாதிப்புக்குள்ளாகும் எமது மனநிலையை கருத்திற்கொண்டு மனித உரிமை என்ற நிலையில் இருந்தும் பதில் அதிபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

8. பாடசாலைகளை நிர்வகிப்பதில் பதில் அதிபர்களின் வகிபங்கையும், அவர்களது பங்களிப்பையும் மதிக்கும் வகையில் பொறிமுறை ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

அதிபர்களின் இடமாற்றம், ஓய்வு போன்ற காரணங்களினால் ஏற்படும் வெற்றிடத்தை சிரேஷ்ட அல்லது முன்வரும் தன்மைக்கேற்பவே பதில் அதிபர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இன்றைய தினத்திலும் பதில் அதிபர்கள் நியமனம் பெறுவது தவிர்க்க முடியாததாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேச பாடசாலைகள் பதில் அதிபர்களின் பொறுப்பிலேயே உள்ளமை கவனிக்கதக்கது. இவ்வாறான யதார்த்த நிலைகளை கருத்திற்கொண்டு இவர்களின் சேவை முக்கியத்துவத்தை உணரும் வகையில் பொறிமுறையை உருவாக்குவதுடன் அதிபர் பிரமாணக்குறிப்பிலும் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் சேவைக்காலமும் ஒருவரின் பதவித் தரத்தையும், பதவி உயர்வையும் நிர்ணயம் செய்கின்றதன் அடிப்படையில் பதில் அதிபர்களின் சேவைக்காலங்களையும் உள்ளீர்த்து அதிபர் பிரமாணக்குறிப்பினுள் உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.

(அகில இலங்கை தமிழ்மொழி மூல பாடசாலைகளில் கடமையாற்றும் பதில் அதிபர்கள் சங்கத்தின் சார்பில்)



**அ.லெட்சுமணன்...**
உபதலைவர், பொறுப்பாளர் (ஊடகம்)

# மருதமுனை ஊடக பேரவை ஆரம்பம்



'மருதமுனை ஊடக பேரவை'என்ற அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் மேற்கொண்ட முயற்சியினால் இப்பேரவை தொடங்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் முஸ்லிம் பிரிவுகளை உள்ளடக்கியதாக பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடக நிறுவனங்களில் பணி புரிகின்ற ஊடகவியலாளர்கள் மருதமுனை ஊடகப் பேரவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஊடகப் பேரவையின் ஊடாக மருதமுனை பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தல், இனநல்லுறவை கட்டியெழுப்புதல் போன்ற சமூக சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மருதமுனை ஊடக பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில்) மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியின் பெண்கள் பிரிவில் பேரவையின் ஸ்தாபகர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஸ்தாபகரும் பிரதித் தலைவருமான பி.எம்.எம்.ஏ.காதர், தலைவர் எம்.எல்.எம்.ஜமால்டீன், பொதுச்செயலாளர் ஜெஸ்மி எம்.மூஸா, பொருளாளர் ஏ.எம்.ஷினாஸ், தவிசாளர் சிரேஷ்ட ஒலிஒளிபரப்பாளர் இஸ்மாயில் பி.மஃரிப், உபதலைவர்களான பிறை எப்.எம். கட்டுப்பாட்டாளர் சிஷே்ட அறிவிப்பாளர் பஸீர் அப்துல் கையூம், சிஷே்ட அறிவிப்பாளர் அதிபர் அலியார் முகம்மட் அன்சார், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும், பேரவையின் சட்ட ஆலோசனை சபை உறுப்பினருமான றைசுல் ஹாதி,போசகர் சபை உறுப்பினர் எம்.ஐ.அப்துல் ஏ.பரீட், பிரதிச் செயலாளர் ஏ.ஆர்.ஏ.நபாயிஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். தெரிவு செய்யப்பட்ட தலைவர், செயலாளர்,பொருளாளர் ஆகியோருக்கான ஆவணங்களை ஸ்தாபகர் காதர் நிகழ்வில் கையளித்தார்.

**மருதமுனை தினகரன் நிருபர்...**

# சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் பாடசாலையில் நாடகப் பயிற்சி





கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொளஸ் மக பக வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ. பீர் முஹம்மட் மற்றும் கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலய அதிபர் எம்.சி. றிப்கா அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாஜிதா மற்றும் உயர்தர மாணவிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இப்பயிற்சிப் பட்டறையில் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்தில் உயர்தரம் கற்கும் மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் இதன்போது வளவாளர்களால் நாடகப்பிரதி எழுதுவது தொடர்பாகவும் நாடகம் எவ்வாறு நடிப்பது என்பது சம்பந்தமாகவும் செய்முறை விளக்கத்தோடு மாணவிகளுக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# கோணாவத்தை மக்களையும் மண்ணையும் நேசித்தவர் மர்ஹூம் பழுலூன் அதிபர்

சுமார் 40 வருட காலமாக பொதுச்சேவையில் தன்னை அர்ப்பணித்த மர்ஹூம் ஏ.எம். பழுலூன்அதிபர் மறக்க முடியாத ஆளுமை ஆவார். அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கல்வி, சமய, சமூக, பொருளாதார, அரசியல், விளையாட்டு போன்ற பல்துறைகளில் சிறந்த ஆளுமையுடன் பிரகாசித்த பழுலூன் அதிபர் காலமாகி சுமார் 15 வருடங்கள்கடந்து விட்ட நிலையில் அன்னாரை நினைவு கூருவது இப்பிரதேச மக்களின் தலையாய கடமையாகும்.



ஆசிரியராக, அதிபராக, சிறந்த சமூக சேவையாளராகப் பாரிய பல சேவைகளில் தன்னை அலங்கரித்தவர் மர்ஹூம் பழுலூன். ஊடகத் துறையிலும் அவர் ஆற்றிய சேவை மகத்தானது.

அட்டாளைச்சேனை 3 ஆம் பிரிவிவின் (அப்போதைய) கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகராக, மற்றும் அதன் தலைவராக பல வருடங்கள் செயற்பட்ட அவர், எல்லோராலும் 'பழுலூன் மாஸ்டர்' என்றே அழைக்கப்பட்டார்.

அட்டாளைச்சேனை ரீ.பி. ஜாயா வித்தியாலய ஸ்தாபகராக விளங்கிய இவர், கோணாவத்தை அந்நூர் வித்தியாலயத்தின் அதிபராக நீண்ட காலம் சேவையாற்றி, அதன் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணம் செய்தவர். பௌதீக வள அபிவிருத்தி, சுற்றுமதில் அமைப்பு எனப் பாடசாலையைத் தரம் உயர்த்துவதில் வெற்றி கண்ட இவர், கல்வித் துறையில் மாத்திரமல்லாது சமய, கலாசார, பொருளாதார, அபிவிருத்தியிலும் அக்கறை காட்டியவர்.

கல்முனை மாவட்ட இஸ்லாமிய ஆசிரியர் சங்கச் செயலாளராகச் சில வருட காலம் சேவையாற்றியதோடு, அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் உப செயலாளராகவும், அதன்பகுதி நேர ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளி வாசல் தென்பகுதி நம்பிக்கையாளர் சபையின் உதவிச்செயலாளராக மிக நீண்ட காலம் பணி புரிந்ததோடு, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக, இணக்க சபை உறுப்பினராக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அட்டாளைச் சேனைக் கிளையின் உபதலைவராகவும், வழலவாய் வயல், கிழல் கண்ட விவசாயச் சபையில் செயலாளர் பல சமூகப்பணிகளிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார். இளமைக் காலத்தில் நல்லதொரு விளையாட்டு வீரனாக விளங்கியதனால் அட்டாளைச்சேனை 'கிரஸன்ட்' விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பதவியையும் வகித்தார். அக்காலப் பகுதியில்ே தசியப் பத்திரிகைகளின் அட்டாளைச்சேனைப் பிரதேச, பகுதி நேர நிருபராக சிறிது காலம் பணியாற்றிய சிறப்பும்இவருக்கு உள்ளமை விசேட அம்சமாகும். அன்னாருடன் மர்ஹூம் நயீம் உடையார், ஐ.எல். எம். தாஹீர் ஆகியோர் சேர்ந்து ஊடகப் பணியில் ஒற்றுமையாகஇயங்கிக் கொண்டிருந்தனையும் ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாகும். எல்லோருடனும் அன்புடனும் இன்முகத்துடனும் பழகும் மர்ஹூம் 'பழுலூன் மாஸ்டர்' தனது 69 வது வயதில் டந்த 2006 ஆம் ஆண்டு காலமானார்.

**றிசாத் ஏ காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# இலங்கை மக்கள் நேர்மையானவர்கள்; மாலைதீவு பிரஜை பாராட்டுகின்றார்

இலங்கையர்கள் என்றும் நம்பிக்கைக்குரியவர்கள், நேர்மையானவர்கள் என்று மாலைதீவைச் சேர்ந்த இஸ்மாயில் பராஸ் தெரிவித்தார்.

கல்கிசை, மிஹிந்து மாவத்தை ஓட்டோ சாரதி ஒருவர் நேர்மையாக நடந்து கொண்டதற்கு நன்றி தெரிவித்து கருத்துத் தெரிவித்தபோதே இஸ்மாயில் பராஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்சம்பவம் பற்றி தெரியவந்ததாவது: மாலைதீவைச் சேர்ந்த இஸ்மாயில் பராஸ் என்பவர் தனது குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வந்து கல்கிசை, மிஹிந்து மாவத்தையில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து குடியிருந்தார். இஸ்மாயில் பராசுடன் மனைவி, மகள், மகன் ஆகியோர் சில வாரங்களாக இங்கு தங்கியிருந்து விடுமுறையைக் கழித்தனர்.

இந்நிலையில் பராஸ் தனது குடும்பத்தினருடன் தமது கைப் பைகள் சகிதம் சம்பவதினம் காலையில் கல்கிசை மிஹிந்து மாவத்தையில் உள்ள ஓட்டோ வண்டி ஒன்றில் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளார். இவர்கள் ஓட்டோவை விட்டு இறங்கிய பின்னர் ஓட்டோ வண்டி உரிமையாளரான ஜே.ஆர். பிரசாத் றொட்ரிகோ என்பவர் மற்றுமொரு பயணி ஒருவரை ஏற்றிச் சென்றுள்ளார். அப்போது அதில் பயணம் செய்தவர் ஓட்டோ வண்டியில் ஒரு கைப்பை இருப்பதை சாரதியிடம் தெரியப்படுத்தியுள்ளார். அந்தப் பயணியை இறக்கிவிட்ட பின்னர் ஓட்டோவின் சாரதி மாலைதீவு பிரஜையிடம் அந்தப் பையை ஒப்படைத்துள்ளார். இப்பையில் இலங்கைப் பணம், உள்நாட்டு வெளிநாட்டு பணநோட்டுக்கள், ஆவணங்கள், பயண கடவுச்சீட்டுகள் அப்படியே இருந்துள்ளன. அது தன்னுடையதுதான் என அடையாளம் கண்ட மாலைதீவுவாசி அளவில்லா மகிழ்ச்சியடைந்து நன்றி கூறியது மட்டுமல்லாமல் ஓட்டோ சாரதிக்கு பரிசுகளும் வழங்கினார் இலங்கையர்கள் நம்பிக்கை மிகுந்தவர்கள் என்று அவர் பாராட்டியதையும் கேட்க முடிந்தது.



**எம்.கே.எம்.அஸ்வர்...**
(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

# வடக்கின் உதயம்

## வடமாகாணத்தில் சுகாதார சேவைகளை வினைத்திறனுடன் செயற்படுத்த பணிப்பு

### ஆளுநர் பி.எஸ்எம்.சாள்ஸ்



**யாழ். விசேட நிருபர்**

வடமாகாணத்தில் சுகாதார சேவைகளை மீளாய்வுக்கு உட்படுத்தி வினைத்திறனுடன் செயற்பட வைக்குமாறு அதிகாரிகளுக்கு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்எம்.சாள்ஸ் பணித்துள்ளார். வடமாகாண சுகாதார சேவைகளுக்கான கரிசனை தொடர்பாக வடமாகாண ஆளுநர் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (31) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சேவை நாடுவோருக்கான சிகிச்சை, முகாமை மற்றும் புனர்வாழ்வு விடயங்கள் சுகாதார சேவை நிலையங்களில் ஒரேவிதமாக நோக்கப்படலாகாது. அவை வெவ்வேறான முறையூடாக அணுக வேண்டுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

வைத்தியர்களின் விடுப்புநேர பதிலீடு, உணவுப் பாதுகாப்பு, வெளி நோயாளர்கள் முறையாக மருந்து பெற்றுக்கொண்டு, அவற்றை கிரமமாக உபயோகிப்பதற்கான கண்காணிப்பு, அவசர அம்பியூலன்ஸ்களின் பராமரிப்பு, சுகாதார பணிமனைகளின் சேவைகள், உள்ளூராட்சிமன்ற சேவைகளில் சுகாதார சேவை பணிமனைகளின் காத்திரமான ஈடுபாடு ஆகியன எவ்வளவு வினைத்திறனுடன் நடைபெறுகிறதென்பது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்களிடம் கேட்டறிந்த ஆளுநர், இவற்றை அடிக்கடி மீளாய்வுக்கு உட்படுத்தி, வினைத்திறனுடன் சேவை வழங்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

தூர, கஷ்டப் பிரதேசங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமிக்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் சுகாதார நிலைமை தொடர்பாக கேட்டறிந்த ஆளுநர், பாடசாலைகளில் குடிநீர், சுகாதாரம், ஆரோக்கியத்தில் அதிக கரிசனை செலுத்த வேண்டுமென்பதுடன், மாணவர்களின் ஆரோக்கியத்தை அதிபர்களும் ஆசிரியர்களும் அறிந்து கொள்ளும் முறை பேண வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு இன்றைய போட்டிக் கல்வி முறையால், உளவியல் பாதிப்பு உருவாகுவது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பொதுமக்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு வெவ்வேறு துறையினரும் இணைந்து செயற்பட்டு, தீர்வு காண வேண்டிய அவசியத்தையும் ஆளுநர் எடுத்துரைத்தார்.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## செல்வச்சந்நிதி திருவிழா 16 இல் ஆரம்பம்; ஆலய நடைமுறைகளை பேண அறிவுறுத்தல்



**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (31) நடத்தப்பட்டது.

மகோற்சவத் திருவிழாவை தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 31ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஆலயத் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

திருவிழாக் காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படுமென்பதுடன், போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்திலுள்ள பாதையினூடாக முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வாகன தரிப்பிடத்துக்கு செல்ல முடியும்.

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் நடமாட்டம் காணப்படுவதால், ஆற்றில் இறங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் சுகாதார நடைமுறைகளை பக்தர்கள் முறையாக பின்பற்ற வேண்டுமென்பதுடன், அதை பின்பற்ற தவறும் பட்சத்தில் சுகாதார நடைமுறைகளின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயத் தேரோடும் வீதியில் நடைபாதை வியாபாரிகள் மற்றும் தற்காலிக கடைகளை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், அதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படுமென்பதுடன், புதிய கடைகள் மற்றும் வீதியோர கடைகளை ஆலய வீதியில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆலயத் திருவிழாக் காலத்தில் உணவு நிலையங்களை அமைக்க வேண்டியிருப்பின், அவற்றின் உரிமையாளர்கள் உணவு நிலையம் நடத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவுகளை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களுக்கான குடிநீர் பொதுச் சுகாதார பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட வேண்டும்.

ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர, வேறு ஒலிபெருக்கிகளின் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவு அகற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

பொருட்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்த் திருவிழாவன்று தேர் வீதியுலா வரும் சமயத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக அந்நேரத்தில் ஆற்றங்கரை வீதியூடாக வாகனங்கள் உள்நுழைய தற்காலிகமாக அனுமதி மறுக்கப்படும்.

அடியவர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## புதுக்குடியிருப்பில் இராணுவத்தினர் நிர்மாணித்த வீடு பயனாளியிடம் கையளிப்பு

**மாங்குளம் குறூப் நிருபர்**



புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தில் குடும்பமொன்றுக்காக இராணுவத்தினரால் கட்டப்பட்ட வீடு நேற்று முன்தினம் (31) கையளிக்கப்பட்டுள்ளது.

இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தில் வசித்துவரும் 3 அங்கத்தவர்களை கொண்ட இந்தக் குடும்பம், தற்காலிக வீட்டில் மிகவும் சிரமப்பட்டதை தொடர்ந்து, இவர்களுக்கு வீட்டைக் கட்டிக்கொடுக்க இராணுவத்தினர் முன்வந்து, கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் வீட்டு நிர்மாணப்பணி முடிவடைந்து, வீட்டுக்கு தேவையான தளபாடங்கள், கிணறு, மலசலகூடம், வீட்டுத்தோட்ட செய்கைக்கான வசதிகளையும் இராணுவத்தினர் செய்து கொடுத்துள்ளனர். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப்படை கட்டளை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எம். கே.ஜயவர்த்தன, 68ஆவது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் சேனக கஸ்தூரமுதலி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ரீ.ஜெயந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக அச்சங்க செயலாளர், சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

சைவப்புலவர் பரீட்சையில் மூத்தம்பி சிவகுமாரன் (கொக்கட்டிச்சோலை), கந்தசாமி கைலைநாதன் (மானிப்பாய்), குணசிங்கம் கந்தபாலன் (கோப்பாய்), சிவப்பிரியா ராஜ்குமார் (இணுவில்), பராபரம் துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா சுவாமிநாத சர்மா (இணுவில்) ஆகியோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இளம் சைவப்புலவர் பரீட்சையில் மகேந்திரன் வினோக்சன் (பொலன்னறுவை), அருமைநாதன் சதீஸ்குமார் (திருகோணமலை), கனகேந்திரன் யோகமணி (தெரணியகல), நடராஜா தர்ஷிகா (பொலன்னறுவை), சுதாகரன் ஸ்ரீகாந்த் (களுவாஞ்சிக்குடி), அளகேந்திரன் நிலாந்தினி (மூதூர்), பானுப்பிரியா தில்லைமணி (வட்டுக்கோட்டை) ஆகியோர் சித்தியடைந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## கராத்தே போட்டியில் மகாதேவா இல்ல மாணவர்கள் சாதனை

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



வடமாகாணத்துக்கான கராத்தே சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் 74 பதங்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பொது உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த வாரம் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் மாணவர்கள் கலந்துகொண்டு 33 தங்கப்பதக்கங்கள், 22 வெள்ளிப்பதக்கங்கள், 19 வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளனர். இந்த மாணவர்கள், கிளிநொச்சி மாவட்டத்துக்கும் இல்லத்துக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## இரத்தினக்கல் சுரங்கத்தினுள் மணல்திட்டு சரிந்து ஒருவர் பலி!

### காவத்தையில் பரிதாப சம்பவம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



காவத்தை, எந்தான பிரதேசத்தில் அமைந்துள்ள இரத்தினக்கல் சுரங்கத்தில் மண்திட்டுக்கள் திடீரென சரிந்து விழுந்ததில், அச்சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரத்தினக்கல் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, இவர்கள் மீது மண்திட்டுக்கள் சரிந்து விழுந்துள்ளதை தொடர்ந்து, இதில் பாதிக்கப்பட்ட இந்த மூவரும் மீட்கப்பட்டு, எந்தான வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சிகிச்சை பயனின்றி 42 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில், ஏனைய இருவரும் எந்தான வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக காவத்தை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக, வைத்தியசாலைத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக காவத்தை பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.





நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் 71ஆவது பிறந்ததின வைபவம் நேற்று நுவரெலியா இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் மடிக்கணினி வழங்கி வைக்கப்பட்டதுடன், சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளிலும் அவர் ஈடுபட்டார்.

## வெலிமடை வனப்பகுதியில் தீ; மூலிகைத்தாவரங்கள் நாசம்



**ஊவா சுழற்சி நிருபர்**

வெலிமடை, ஊவா பறணகம மொறொகொல்ல மலைத்தொடரில் அரச வனப்பகுதிக்கு இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் மாலை வைக்கப்பட்ட தீயால், பெறுமதியான பல மரங்களும் மூலிகைத் தாவரங்களும் எரிந்து நாசமாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போதைய வரட்சி மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக தீ பரவல் வேகமாக அதிகரித்தாலும், பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர்.

வேட்டையாடும் நோக்கில் காடுகளுக்கு தீ வைக்கும் நபர்கள் தொடர்பாக ஊவா பறணகம பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்காக

## சமன் தேவாலயத்தில் விசேட நுழைவாயில்



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மகா சமன் தேவாலயத்தில் விசேட தேவையுடையவர்களின் நன்மை கருதி அத்தேவாலயத்தில் விசேட நுழைவாயிலொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சமன் தேவாலயத்தின் தியவடன நிலமே மிகார ஜயசுந்தரவின் வேண்டுகோளுக்கமைய இரத்தினபுரி சிங்க சமாஜத்தின் அனுசரணையுடனும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனும் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றதுடன், தேவாலயத்தின் விளக்கேற்றும் தொகுதியும் புனரமைக்கப்பட்டுள்ளது.

### எரிவாயு ஏற்றிச்சென்ற லொறி பழுதடைந்ததால்

## நுவரெலியா – உடப்புசல்லாவ வீதியில் போக்குவரத்து பாதிப்பு



நுவரெலியா பிரதான நகருக்கு லாப் சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு சென்ற லொறியொன்று திடீரென பழுதாகியதால், அதன் பயணத்தை தொடர முடியாத நிலையில் நுவரெலியா - உடப்புசல்லாவ பிரதான வீதியின் நடுவில் லொறி தரித்து நின்றதால், சுமார் இரண்டு மணிநேரம் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நுவரெலியா, பொரலாந்தை பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலைக்கு செல்லவிருந்த இந்த லொறியில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பயணத்தை தொடர முடியாது நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் லொறி நின்றது.

இந்நிலையில், இந்த வீதி வழியாக பயணித்த ஏனைய வாகனங்கள் வீதியின் இரு புறங்களிலும் பயணத்தை தொடர முடியாதவாறு நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றுள்ளன. இதன் காரணமாக சுமார் இரண்டு மணிநேரம் மேற்படி வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. லொறியை பழுது பார்ப்பவர்கள் வரவழைக்கப்பட்டு, லொறியை வீதியோரத்துக்கு கொண்டு சென்று நிறுத்திய பின்னர், ஏனைய வாகனங்கள் தமது பயணத்தை தொடர்ந்தன.

இதன்போது, நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்ய உதவியளித்துள்ளனர்.

## இலங்கை மலையக இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஆன்மிக எழுச்சி விழா

**ஹட்டன் விசேட நிருபர்**



இலங்கை மலையக இந்துக்குருமார் ஒன்றியத்தின் 18ஆவது வருட முன்னேற்பாட்டு ஆன்மிக எழுச்சி விழா, பூண்டுலோயா நகரில் மிகவும் பிரமாண்ட முறையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ செல்வராஜ் செல்லதுரை சிவாச்சாரியார் தலைமையில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது பூண்டுலோயா நகரில் மேளதாள வாத்தியங்கள் இசை முழங்க, சிறுவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் ஊர்வலமொன்று பூண்டுலோயா தமிழ் தேசிய பாடசாலை வரை சென்றது.

இதனைத் தொடர்ந்து, அப்பாடசாலையில் விழா ஆரம்பமாகி நடைபெற்றது.

நாட்டிய கலை, கலாசார பஜனை மற்றும் ஆன்மிக கவிதை சிறந்த யோகா கலைக் கண்காட்சியும் நடைபெற்றது. இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஸ்தாபக செயலாளர் உட்பட குருமார்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பரதநாட்டிய ஆசிரியர்கள், யோகாக்கலை ஆசிரியர் இலங்கை பிரம்மகுமாரி நிலையப் பொறுப்பாளர்கள், ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இலங்கை மலையக இந்துக்குருமார் ஒன்றியத்தின் குருமார்கள் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

## 18 நிமிடங்களில்...

நடந்து உலக சாதனை படைத்துள்ளார். மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டத்தில் இருந்து மஸ்கெலியா பொலிஸ் நிலையம் வரை 2 கிலோ மீற்றர் தூரத்தையே இச்சிறுமி நடந்து சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டி நேற்று முன்தினம் (31) மஸ்கெலியா பிரதான வீதியில் பிரவுண்லோ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

மஸ்கெலியா சென் ஜோசப் ஆரம்ப பிரிவு பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் விக்னேஸ்வரன் சஸ்மிதா என்ற சிறுமியே மேற்படி தூரத்தை 18 நிமிடங்களில் நடந்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

குறித்த சிறுமியின் தந்தை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை நடை பயணமாக வந்து சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரவுன்லோ தோட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த சாதனை நடை பயணத்தில் கலந்துகொண்ட சிறுமிக்கு பதக்கங்கள் மற்றும் கேடயங்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் சோழன் உலக சாதனை சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

## வவுனியா தோணிக்கல்...

கமரா காட்சியின் மூலம் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் (31) மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் வவுனியா பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு குற்றச்செயல்களுக்கு உதவிய 3 மோட்டார் சைக்கிள்களுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 24, 27, 31 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வொன்று நடைபெற்ற வீட்டிற்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கி வீட்டிற்கு தீவைத்து எரித்திருந்தனர். இதன்போது, வீட்டில் இருந்த 10 பேர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தம்பதி உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த 02 வயதுடைய ஆண் குழந்தையும், 07 மற்றும் 13 வயதுடைய பெண் பிள்ளைகளும், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட 04 பெண்களும், 42 வயதுடைய ஆண் ஒருவரும் வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## யாழ். நிலா....

வேகமாகவும், பாதுகாப்பாகவும், நம்பிக்கையுடனும் பயணிக்கும் வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விசேடமாக நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்ளும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இந்து பக்தர்களுக்கு பெரும் உதவியாக இச்சேவை அமையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

குளிரூட்டப்பட்ட சொகுசு ரயில் கல்கிசையில் இருந்து நான்காம் திகதி இரவு 10 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.30 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும் என அமைச்சர் தெரிவித்தார். ஆகஸ்ட் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் இந்த ரயில், மறுநாள் காலை 5:20 மணிக்கு கொழும்பை வந்தடையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 18 முதல் தினமும் இந்த ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், ஆசன வசதிகளை ஒன்லைன் பதிவு மூலமும் பதிவு செய்யலாம் எனவும் கூறினார். ஒரு பயணத்திற்கான டிக்கெட்டின் விலை 4000 ரூபாய் என குறிப்பிட்ட அமைச்சர், இந்த ரயில் டிசம்பர் 31ம் திகதி வரை தொடர்ச்சியாக இயங்கும் எனவும் தெரிவித்தார்.

# புதிய இரவு நகர்சேர் கடுகதி புகையிரதம்

வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரையும் ஞாயிறு இரவு 9.30 இற்கு காங்கேசன்துறையில் இருந்து கல்கிசை வரையும் சேவையில் ஈடுபடும். காங்கேசன்துறை வவுனியா இருந்து கல்கிசைக்கு

முதலாம் வகுப்பு ரூ.4000.00, இரண்டாம் வகுப்பு ரூ.3000, மூன்றாம் வகுப்பு ரூ.2000

5 மாதங்களின் பின்னர் எதிர்வரும் ஜனவரி 01ஆம் திகதி முதல் அநுராதபுரம் மற்றும் மஹவைக்கிடையிலான ரயில் பாதையை நவீனமயப்படுத்துவதற்காக இந்த ரயிலை குறுகிய காலம் நிறுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடளாவியரீதியில்...

குறைவடைந்துள்ளது.

அத்துடன் மகாவலி அதிகார சபையின் மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவும் 35 சதவீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகல, மவுசாகலை உள்ளிட்ட மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு குறைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக சில நீர்த்தேக்கங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளமையினால், வரட்சியான காலநிலை தொடருமானால் நீர் மின் உற்பத்தி பாரியளவில் பாதிக்கப்படலாம் என மகாவலி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிலாந்த தனபால தெரிவித்தார்.

இதேவேளை, உடவலவ நீர்த்தேக்கத்திலிருந்து நெற்பயிர்களுக்கு நீர் வழங்குமாறு கோரி எம்பிலிப்பிட்டிய நகர விவசாயிகள் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் வரட்சி காரணமாக சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் 20 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து விவசாய நிலங்களுக்கு நீர் விடப்பட்டால் தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள பல மாவட்டங்களில் சுமார் 04 மணிநேரம் மின்சாரத்தை துண்டிக்க நேரிடும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## இரு நாடுகளுக்கிடையே ...

மத்தியிலான பயணங்களை அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஐக்கிய இலங்கைக்குள்ளேயே காணவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் அதன் அயல்நாடான இலங்கைக்கும் இடையிலான போக்குவரத்துகள் அதிகமாவதற்கு தரைத்தொடர்புகள் அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர், சூழல் குறித்த கரிசனைகளிற்கு தீர்வு காணப்பட்டால் பிரிட்டனிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான கால்வாய் போன்ற திட்டங்களை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வீதிகளில் நெடுஞ்சாலைகள் பெருந்தெருக்கள் போன்றவற்றை அமைப்பதற்கு சூழல்பாதிப்பு குறித்த மதிப்பீடுகளை பெறவேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், இந்தியாவின் வளர்ச்சியிலிருந்து நன்மை பெறும் எண்ணம் இலங்கைக்கு காணப்பட்டால் அது நிலரீதியான இணைப்புகள் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

13வது திருத்தத்தை அடிப்படையாக கொண்ட அதிகாரப்பகிர்வு குறித்து இந்திய பிரதமர் வெளியிட்ட கரிசனைகள் இரு நாடுகளிற்கும் இடையிலான கூட்டறிக்கையில் ஏன் இடம்பெறவில்லை என்ற கேள்விக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது யோசனைகளை பிரதமர் நரேந்திரமோடியுடன் விவாதித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.க செயற்குழு...

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்காகவே கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இடம்பெறுவதாக கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது வருடாந்த மாநாட்டை செப்டம்பர் 10 ஆம் திகதி நடத்துவதற்கு கட்சியின் முகாமைத்துவக் குழு மேற்கொண்ட தீர்மானத்தை இன்றைய கூட்டத்தின் போது அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கட்சி மாநாட்டை நடத்தும் இடம் மற்றும் மாநாடு தொடர்பான ஏற்பாட்டுக் குழு தொடர்பிலும் இன்றைய தினம் அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை நாடளாவிய ரீதியில் 135 தொகுதிக்கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் மேலும் தொகுதிக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அனைத்தும் நிறைவடைந்த பின்னர் கட்சி மாநாடு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை பலப்படுத்தும் அனைத்து யோசனைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும் அத்துடன் 13 வது அரசியலமைப்புக்கு இணங்க அதிகார பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

13வது அரசியலமைப்பு திருத்தத்தை பலப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டங்கள் கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதன் போது தெளிவுபடுத்த உள்ளதாகவும் அத்துடன் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது எவ்வாறு என்ற விடயங்களையும் ஜனாதிபதி அதன் போது தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சமஷ்டி..

அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13வது திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனினால் திங்கட்கிழமை (31) வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்யைிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு முதல், வடக்கு கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது,இதில்மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டது முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்திற்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார்.

## ஏழு மாதங்களில்...

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறையின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ளதுடன், சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்துவதற்காக அமைச்சினால் புதிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு ஒரு வழி' என்ற தொனிப்பொருளில் நேற்று (01) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் 7 மாதங்களில் எழு இலட்சத்து அறுபத்து மூவாயிரம் (7,63,000) சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இலங்கையும் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வருமானம் ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சுற்றுலா பயணிகளின் வருகை 205% வளர்ச்சி கண்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாத்துறை பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அன்னிய கையிருப்பு அளவும் அதிகரித்துள்ளது.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் புதிய வேலைத்திட்டத்தை சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சு நடைமுறைப்படுத்துகிறது. அண்மையில் முடிவடைந்த உலக அழகி சுற்றுலாப் போட்டியின் இறுதிச் சுற்று இலங்கையில் நடைபெற்றது. 30 நாடுகளில் இருந்து போட்டியாளர்கள் இலங்கை வந்தனர். அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

அதன் ஊடாக இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பங்களித்தனர். இவ்வருட இறுதிக்குள் உலக சுற்றுலா விருதுகளின் இறுதிப் போட்டியை இலங்கையில் நடத்த திட்டமிட்டுள்ளோம். இது டிசம்பரில் இலங்கையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 117 நாடுகள் பங்கேற்க உள்ளமையும் விசேட அம்சமாகும்.

கடந்த காலங்களில் இங்கிலாந்து, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அந்த வருகையை பராமரிக்க நாம் உழைக்க வேண்டும் என்றார்.

## 'சினோபெக்'...

பின்னர் நாடளாவிய ரீதியில் 150 எரிபொருள் நிலையங்களுடன் செயற்பாடுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது.

பெற்றோல் நிலைய விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட பின்னர், சினோபெக் நாடு முழுவதும் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் பெற்றோலிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் புதிய சில்லறை விற்பனையாளர்கள் சந்தையில் நுழைவது பெற்றோலிய பொருட்களுக்கான அந்நியச் செலாவணி தேவைகளை எளிதாக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோல் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட பின்னர், சினோபெக் நாடு முழுவதும் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் பெற்றோலிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## மாகாண...

வேண்டும் என இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்தியப் பிரதமா் நரேந்திர மோடி வலியுறுத்தியிருந்தார். எனவே அந்த குறிப்பிட்ட விடயங்களை அமுலாக்குமாறும் அதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்குமாறும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்திய தூதுவரிடம் தெரிவித்தனர்,

அதன் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் சர்வ கட்சிக் கூட்டம் இடம்பெற்ற போதிலும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்தவொரு இணக்கப்பாடும் இதுவரை எட்டப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தமிழ் கட்சிகள் வலியுறுத்திய போதிலும் ஜனாதிபதி அதற்கு நேரடியான பதில் எதனையும் வழங்கவுமில்லை.

இவ்வாறான சூழலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், கலையரசன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அதிகார பகிர்வு, உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவித்தார்.

சந்திப்பின் பின் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

### குவைத்தில் போதைப்பொருள் கடத்திய குற்றம்;

# மரணதண்டனை விதிக்கப்பட்டவரின் உடலை ஏற்க உறவினர்கள் மறுப்பு

போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் குவைத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கையரின் உடலை இறுதிச் சடங்குகளுக்காக ஏற்றுக்கொள்ள உறவினர்கள் மறுத்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அவருக்கு தூக்குத் தண்டனை குவைத்தில் நிறைவேற்றப்பட்டது. ஹல்மில்லேவ, அதிராணிகம பிரதேசத்தைச் சேர்ந்த வயது 43 நபருக்கே போதைப்பொருள் கடத்தல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு குவைத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் தனது பெற்றோருடன் 14 வருடங்களுக்கு முன்னர் பிரியங்கரகம என்ற கிராமத்தில் குடியேறி தனது முதல் மனைவியைப் பிரிந்து மறுமணம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பின்னர், அவர் களுத்துறைக்கு இடம்பெயர்ந்ததாகவும் ஆனால் அவரது முகவரி அவரது உறவினர்களுக்குத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது .

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா, குற்றவாளியின் தாயாரின் கோரிக்கைக்கு அமைய சடலம் கையளிக்கப்படும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் உள்ளதாகவும் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், அநுராதபுரத்தில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிரேஷ்ட முகாமையாளர், உயிரிழந்தவரின் உறவினர்களை சந்தித்த பின்னர் அவர்கள் சடலத்தை பெற்றுக்கொள்ள தயாராக இல்லை என குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளார்.

## எந்த தேர்தலுக்கும் ....

பொதுஜன பெரமுன 70 வீதத்திற்கும் அதிகமான வாக்காளர் தொகுதிகளில் தன்னை மறுசீரமைத்துள்ளதால் வெற்றிவாய்ப்பு அதிகமாகவே இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொல்கஹவெலவில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மீண்டும் தேர்தல் தொகுதிக்கு செல்ல முடியாது என பலர் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு நாங்கள் தாக்கப்பட்ட பிறகு பலரும் நினைத்தது இப்படித்தான். எவ்வாறெனினும் 70 வீதத்திற்கும் அதிகமான தேர்தல் தொகுதிகளில் எம்மை மறுசீரமைக்க முடிந்துள்ளது. பொதுஜன பெரமுன குருநாகல் மாவட்டத்தில் 200,000 க்கும் அதிகமான பெரும்பான்மையுடன் வெற்றி பெறும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிக விருப்பு வாக்குகளைப் பெறுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிகாரத்தை...

13ஆவது திருத்தத்தில் அதிகாரத்தை பகிர்வது தொடர்பில், அடுத்தவார பாராளுமன்ற கூட்டத்தில் ஜனாதிபதி விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றவுள்ளார்.

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை பலப்படுத்தும் அனைத்து யோசனைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

13வது அரசியலமைப்பு திருத்தத்தை பலப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டங்கள் கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதன் போது தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அத்துடன் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது எவ்வாறு என்ற விடயங்களையும் ஜனாதிபதி அதன் போது தெளிவுபடுத்தவுள்ளார்.

## இந்திய தூதுவருடன்...

இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் தமுகூவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்களென தமுகூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## கோழி இறைச்சி...

கோழி இறைச்சி உற்பத்தி தொழில் துறை சார்ந்த சங்கத்தின் உறுப்பினர்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளனர். அதன் போதே இந்த விலைக் குறைப்பை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர,

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கு அமைய மேற்படி கோழி இறைச்சி உற்பத்தி துறையினருடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் பிரதிபலன் எதிர்வரும் அமைச்சரவையின் போது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.அமைச்சருடனான மேற்படி சந்திப்பின்போது சோளம் ஒரு கிலோவுக்காக அறவிடப்படும் 75 ரூபா இறக்குமதி வரியை 25 ரூபாயாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய கோழி இறைச்சி உற்பத்தித் துறை உறுப்பினர்கள் அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அவர்களின் அந்த வேண்டுகோளையும் கோழி இறைச்சியின் விலையை குறைப்பதற்கு மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டையும் தாம் இன்று ஜனாதிபதியிடம் முன்வைக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள்....

இதனால் எரிபொருள் இறக்குமதிக்கான செலவு குறைக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடு டொலர் நெருக்கடியில் இருந்தபோது, QR குறியீடு அறிமுகப்படுத்தியதன் ப யனாக, ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு டொல ரை பயன்படுத்த முடிந்தது. QR கு றியீடு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வருடத்திற்குள் 65 இலட்சம் வாகன ங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வு ம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## CID யினரால்....

சம்பவம் தொடர்பில் திணைக்களத்திற்கு ஏற்கனவே பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக, தற்போதுள்ள சட்டத்தின் கீழ் இந்த சம்பவத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அதிகாரிகள் குறிப்பாக ஆய்வு செய்து வருவதாகவும், பொலிஸ் மா அதிபருடன் இன்று (2) கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் தினேஷ் குணவர்தனவின் ஆலோசனையின் பேரில், தேசிய கீதத்தை சிதைத்து பாடியமை தொடர்பில் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கே.டி.என். ரஞ்சித் அசோகவும் நேற்று முன்தினம் (31) விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் குறித்த விசாரணை அறிக்கை விரைவில் பிரதமரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதேவேளை, தேசிய கீதத்தை திரிபுபடுத்தும் வகையில் பாடுவது அல்லது மாற்றுவது சட்டத்திற்கு முரணானது எனவும் அவ்வாறு செய்வோர் மீது தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

## ஆங் சான்...

மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் முற்றிலுமாக விடுவிக்கப்படவில்லை எனவும், அவர் மேலும் 14 வழக்குகளை எதிர்கொண்டுள்ளார் எனவும் மியன்மார் அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 78 வதான ஆங் சான் சூகி,1991 ஆம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசை பெற்றவர்.

2021 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியையடுத்து, ஆங் சான் சூகி உட்பட ஜனநாயக அரசியல் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். பல்வேறு வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு மொத்தமாக 33 வருட சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஊழல், சட்டவிரோதமாக வோக்கி டோக்கிகளை வைத்திருந்தமை, கொரோனா கட்டுப்பாடுகளைப் புறக்கணித்தமை முதலானவை தொடரபான குற்றச்சாட்டுகளும் இவற்றில் அடங்கும். சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், கடந்த வியாழக்கிழமை வீட்டுக் சிறைக்கு மாற்றப்பட்டார்.இந்நிலையில், 5 வழக்குகளிலிருந்து அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## வட்டவளையில்...

(01) அதிகாலை 4.40 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தின் போது, பஸ்ஸில் 120 பேர் வரை பயணித்துள்ளனர். எனினும் 18 பேர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே பஸ் கட்டுப்பாட்டை இழந்ததனால் இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த 18 பேரும், வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அங்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்விபத்து தொடர்பில் வட்டவளை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தினகரன் Business

## TRI-ZEN: இலங்கையின் ஸ்மார்ட் வாழ்க்கை முறையில்

# புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது



எதிர்காலத்துக்கு உகந்த வகையில் நிர்மாணிக்கப்படும் TRIZEN தொடர்மனைகள், யூனியன் பிளேஸ், கொழும்பு 2 எனும் கொழும்பின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இதுவரையில் இந்தத் தொடர்மனைகளின் 75% ஆனவை விற்பனையாகியுள்ளதாகவும், 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்தத் திட்டம் பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜோன் கீல்ஸ் புறொப்பர்டீஸ் மற்றும் இந்திரா டிரேடர்ஸ் (பிரைவட்) லமிடெட் ஆகிய நிறுவனங்களிடையே இணை நிர்மாணத் திட்டமாக அமைந்துள்ள TRIZEN தொடர்மனை குடியிருப்புகளுக்கு இதன் மூலம் பெருமளவு கேள்வி மற்றும் எதிர்பார்ப்புகள் நிலவுகின்றமை புலனாகியுள்ளது.

நிர்மாணத்தின் இறுதிக் கட்டத்தை எய்தியுள்ள TRIZEN, தொடர்ந்தும் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்த வண்ணமுள்ளதுடன், இதன் மத்திய அமைவிடம், தூர நோக்குடைய அலங்கார வடிவமைப்பு மற்றும் வாழ்க்கை முறைக்கு பொருத்தமான தோற்ற அமைப்பு, நவீன வசதிகள் மற்றும் உள்ளம்சங்கள் மற்றும் தொடர்மனை வாழ்க்கைக்கு பொருத்தமான அதன் தொழில்நுட்ப, நிலைபேறான வழிமுறை போன்றன காரணமாக இவ்வாறு அதிகளவு கவனத்தை ஈர்த்துள்ளது. நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும், இலங்கையில் அதிகளவு நாடப்படும் வதிவிடத் தொகுதியாக TRIZEN அமைந்திருக்கும். TRIZEN இனால் கவர்ச்சிகரமான விலையில் தொடர்மனைகள் வழங்கப்படுவதுடன், பரந்தளவு விலைத் தெரிவுகளில் அமைந்துள்ளது. ரூ. 44 மில்லியனிலிருந்து ஆரம்பிப்பதுடன், வீட்டு உரிமையாளர்களுக்கு ஸ்மார்ட் மற்றும் நவீன வசதிகளுடனான வாழ்க்கையை நகரின் மையத்தில் அனுபவிக்கும் வசதி கிடைப்பதுடன், சிறந்த பெறுமதியையும் பெற்றுக் கொள்ள முடியும். TRIZEN இல் மூன்று குடியிருப்பு தொகுதிகள் காணப்படும். மொத்தமாக 891 தொடர்மனைகள் அமைந்திருப்பதுடன், இவற்றில் 1, 2 மற்றும் 3 படுக்கையறை அலகுகள் அடங்கியிருக்கும். ஒவ்வொரு அலகும் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும் என்பதுடன், குடியிருப்பாளர்களுக்கு சௌகரியத்தையும், சொகுசான வாழ்க்கை முறையையும், கொழும்பு நகரின் மையத்தில் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

## 'மெக்ஸன்ஸ்' நிறுவனத்தின் புதிய காட்சியறை டுபாயில் திறப்பு



இலங்கையின் முன்னணி நிறப்பூச்சு (Paint) மற்றும் 'மெக்டைல்ஸ்' டைல்ஸ் உற்பத்தி மற்றும் இரும்பு உபகரணங்கள் தயாரிப்பு விற்பனை நிறுவனமான "மெக்ஸன்ஸ்" நிறுவனம் தனது புதிய காட்சியறையொன்றை டுபாயில் திறந்து வைத்துள்ளது.

மெக்ஸன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஹாஜி சிமர் மில்பர் புதிய காட்சியறையை டுபாயில் வைபவரீதியாக அண்மையில் திறந்து வைத்தார்.

இந்த காட்சியறை அங்குரார்ப்பணம் இந்த நிறுவனத்தின் பயணத்தில் புதிய யுகமொன்றை உருவாக்கியுள்ளதுடன் வர்த்தகத் துறையில் மைல் கல்லாகவும் அமைந்துள்ளது. இந்த நிறுவனம் இலங்கையில் உயர்தரமான பிரபல மல்டிலக் பெயின்ட் (நிறப்பூச்சு), மெக்டைல்ஸ் மற்றும் ஹாட்வெயார் (இரும்பு), உயர்தர கருவிகள், உபகரணங்களை சந்தைக்கு வழங்கி வருகின்றமை விசேட அம்சமாகும்.

புதிதாக திறந்து வைத்துள்ள டுபாய் காட்சியறை புதிய சர்வதேச விநியோகத் தளமாகவும் டுபாய் நகரின் பொருளாதார மையத்தில் அமைந்துள்ள காட்சியறை மத்திய கிழக்கு, டுபாய் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் மொத்த விற்பனை வாடிக்கையாளர்களுக்கு பரந்த சேவை நிலையமாகவும் இது அமையும். நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள நிறுவனத்தின் நிபுணர் குழு தயாராகவுள்ளது.

## DFCC Leasing - Micro Cars

## கூட்டு குத்தகை ஊக்குவிப்பு

பொதுமக்களுக்கு கூட்டு குத்தகை ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக DFCC Leasing மற்றும் Micro Cars ஆகியன புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. DFCC Leasing மற்றும் Micro Cars ஆகியவற்றுக்கு இடையிலான இந்த கூட்டு முயற்சியானது தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களைப் பொறுத்த வரையில் இரு நிறுவனங்களாலும் வழங்கப்படும் ஒருங்கிணைந்த பலாபலன்களை அனுபவிப்பதற்கான சிறந்த வாய்ப்பாகும். ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் நியாயமான கட்டண வீதங்கள், நெகிழ்வுடனான மீள்கொடுப்பனவுத் தெரிவுகள், உயர்தர தயாரிப்புகள் மற்றும் இரு முனைகளிலும் பிரத்தியேகமயப்படுத்தப்பட்ட சேவை போன்ற பல வரப்பிரசாதங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. Micro Cars நிறுவனத்தின் Saic Almaz SUV மற்றும் Proton Saga Sedan ஆகியவை இந்த விசேட கூட்டு குத்தகை ஊக்குவிப்பின் கீழ் வழங்கப்படும் முக்கிய மோட்டார் வாகன வகைகளாகும்.



DFCC Leasing மற்றும் Micro Cars ஆகியவற்றுக்கு இடையிலான இந்த ஒத்துழைப்பு, தமது வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த மதிப்பு மற்றும் சேவையை வழங்குவதற்கான அவர்களின் கூட்டு அர்ப்பணிப்புக்கு சான்றாகும். மேலும் விபரங்களை அறிந்துகொள்ள அல்லது இந்த விசேட குத்தகை ஊக்குவிப்பைப் பெற, வாடிக்கையாளர்கள் DFCC வங்கியின் 24 மணிநேர துரித அழைப்பு இலக்கமான 112350000 மூலமாக, அல்லது info@dfccbank.com அல்லது Micro Cars நிறுவனத்தை 0776 626262 என்ற இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளலாம். அல்லது DFCC வங்கிக் கிளை அல்லது Micro Cars காட்சியறைக்குச் சென்றும் அறிந்து கொள்ள முடியும். மேலும் தகவல்களை https://www.microcars.lk மூலமாக இணையத்திலும் அறிந்து கொள்ள முடியும்.

## செலான் வருடாந்த விற்பனை விருதுகள் 2022




இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதிசார் சேவைகள் துறையின் விற்பனை சூழலை மாற்றியமைத்தல் மீதான தனது ஆர்வத்துக்கு அமைவாக செலான் வங்கி, தனது தொடர்ச்சியான 6 ஆவது வருடாந்த விற்பனை விருதுகள் 2022 அண்மையில் சினமன் கிராண்ட் ஹோட்டலின் ஓக் மண்டபத்தில் நடைபெற்றதோடு, இது வங்கியின் விற்பனை அணிகள் மற்றும் தொடர்பு அதிகாரிகளின் தன்னிகரற்ற அடைவுகளைக் கொண்டாடுகின்ற, விற்பனை விசேடத்துவத்துக்கான அவர்களது சளைக்காத அர்ப்பணிப்பை கௌரவிக்கின்ற ஒரு நாளாக அமைந்தது.

செலான் வருடாந்த விற்பனை விருதுகள் 2022 ஆனது 'Greater Together' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றதோடு, இணைவாக்கத்தின் பலம், குழுச் செயற்பாடு, விற்பனை மற்றும் வணிகச் செயற்பாடுகளில் ஒற்றுமை என்பவற்றை வலியுறுத்தியது.

இந்நிகழ்வின் கருப்பொருளானது சவால்களை வெற்றிகொள்ளல், தனிச்சிறப்பான பெறுபேறுகளை எட்டுதல், மற்றும் துடிப்பான விற்பனை அணியொன்றைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் என்பவற்றில் செலான் வங்கி கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் செலான் வங்கியின் வரலாற்றில் இதுவரையிலான அதியுச்ச இலாபத்துக்கு இவ் அணியினர் பங்களித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.








நவநாகரிக அனுபவத்தை மேம்படுத்தும் La Vivente கொழும்பு 7இல் தனது ஐந்தாவது புதிய காட்சியறையை அண்மையில் திறந்துள்ளது, திறப்பு விழா La Vivente இணை ஸ்தாபகர்களான வைத்தியர் திலேஷா பெரேரா மற்றும் சுனேத் கோரல ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஊழியர்கள், ஊடகவியலாளர் பலர் கலந்து கொண்டனர். La Vivente ஏனைய காட்சியறைகள் காலி, கொஸ்வத்த, நீர்கொழும்பு, கண்டி மற்றும் La Viventeவின் சேவைகள் நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(படங்கள் விமல் கருணாதிலக்க)

## நிலையான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் Sarvodaya Development Finance



Sarvodaya Development Finance (SDF) ஆனது இலங்கையின் முதலாவது அபிவிருத்தி நிதி சார் நிறுவனமாகும். அத்தோடு தொடர்ந்து இத்துறையில் முன்னணியில் இருந்து வருகிறது. கடந்த சில காலங்களாக நிலவிய சூழ்நிலை காரணமாக பல சவால்கள் மற்றும் பாதகமான பொருளாதார சூழலை எதிர்கொண்ட போதிலும், இந்நிறுவனம் தனது மூலோபாய முன்முயற்சிகள் மற்றும் தகுந்த செலவின மேலாண்மை மற்றும் செயல்பாட்டு திறன் ஆகியவற்றின் காரணமாக 2022 இல் வலுவான நிதி KPIகளை அடைய முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பிரத்தியேக பேட்டியில், SDF நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிலாந்த ஜெயநெட்டி,...

நாங்கள் இப்போது கட்டியெழுப்பியுள்ள வலுவான நிதி நிலைமை, எமது பங்குதாரர்கள் மத்தியில் நன்மதிப்பை வழங்குவதோடு எமது நிறுவன உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது. அத்தோடு, இனி வரும் ஆண்டுகளில் எமது நிலையான நிறுவன வளர்ச்சி தொடரும் என எதிர்பார்க்கின்றோம். கடந்த ஆண்டு நாம் அடைந்திருக்கும் சிறந்த நிதிச் செயல்திறன் ஆனது, எங்கள் வைப்பாளர்கள் / வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், தரமதிப்பீட்டு நிறுவனங்கள், உள்ளூர் வங்கிகள் மற்றும் சர்வதேச கடன் வழங்குபவர்களிடையே ஒரு 'நம்பிக்கை வட்டத்தை' உருவாக்குவதன் மூலம், எங்கள் பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதில் நாம் வழங்கிய கூர்மையான மற்றும் ஒருங்கிணைந்த கவனத்தின் நேரடி விளைவாகும்.

## இளம் பொறியியலாளர்களுக்கு புத்தாக்கமான சிந்தனை மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் SLIIT YEE 2023



பொறியியல் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்படும் மிகவும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள 'Young Engineers Expo 2023' (YEE '23) நிகழ்வு தொடர்பில் SLIIT பொறியியல் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான சமன் திலகசிறி,

SLIIT இல் தங்கள் கல்வியைத் தொடங்கும் போது, முதல் வருடத்தில் இருந்து, புதுமை மற்றும் சிந்தனைக்கு அப்பால் யோசிப்பதற்கான திறன் என்பவற்றை நோக்கி அவர்களை ஊக்குவிக்கிறோம். இதன் மூலம் அவர்கள் ஒரு பிரச்சினைக்கு ஒரு நடைமுறை ரீதியான தீர்வை வகுத்து அதனைச் செயற்படுத்தக் கூடியவர்களாகின்றனர். இந்தப் புத்தாக்க முயற்சிகள் எமது Young Engineering Expo நிரூபிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சிவில் பொறியியல், இயந்திரவியல் பொறியியல் அல்லது இலத்திரனியல் பொறியியல் ஆகிய பரந்துபட்ட துறையில் தமக்கான விருப்பத்தைத் தெரிவுசெய்ய மாணவர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் தனித்துவமான அணுகுமுறையில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். முதலாவது வருடத்தில் அனைத்து மாணவர்களும் ஆளமான அறிவைப் பெற்றுக்கொள்ளப் பொதுவான பாடத்திட்டமொன்றைப் பின்தொடர்வார்கள். இரண்டாவது வருடத்தில், தாம் விரும்பும் துறையில் சிறப்புப் படிப்பை மேற்கொள்ள முடியும். இந்தக் கட்டத்தில் மாணவர்களுக்கு எந்தவொரு கடுமையான GPA தேவைகளோ அல்லது செயற்பாட்டு ரீதியிலான வரையறைகளோ இல்லை.

# கிழக்கின் குரல்



# தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்காக செயற்பட்டவர் மர்ஹூம் ஹஸ்புல்லாஹ்

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை

(ஒலுவில் விசேட, அட்டாளைச் சேனை விசேட நிருபர்கள்)







பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்காக செயற்பட்டவரென, யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் 'பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வும் பணியும், நூல் வெளியீட்டு விழா திங்கட்கிழமை (31) தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவரும்,தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கை அறபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எஸ்.எம். ஜலால்தீன் தலைமையில் நடைபெற்ற, இவ் வைபவத்தில் பொ.பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆய்வுத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அதனூடாக முஸ்லிம் சமூகத்தின் கல்வியை வளப்படுத்துவதில் முன்மாதிரியானவர். வட,கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமென தன்னாலான முழு முயற்சிகளையும் எடுத்திருந்தார்.

சிறந்த தலைமைத்துவ பண்பு, ஆளுமை விருத்தி கொண்ட ஹஸ்புல்லாஹ் பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற காலத்தில் மாணவர்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடுநிலையாக நின்று செயற்பட்ட ஒருவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் சர்வதேச நாடுகளில் நடைபெற்ற சமாதான கருத்தரங்குகள் மற்றும் ஆய்வு துறை சம்மந்தமான கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றியிருந்தமை பல்கலைக்கழகத்திற்கு பெருமையை ஏற்படுத்திருந்தது.

தான்சார்ந்த சமூகத்திற்கு அப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர். இவர் ஒரு போதும் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டவரல்ல என்றார்.

இவ் வைபவத்தில் பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயில் வெளியீட்டுரையையும், நூல் அறிமுக உரையை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்பு அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

## மாணவர்களுக்கு தெளிவூட்டல்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

திண்மகழிவு முகாமைத்துவம் தொடர்பாக ஏறாவூர் நகர பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டும் செயலமர்வு தகவல் தொடர்பாடல் பயிற்சி மையம் மற்றும் ஏறாவூர் நகர சபை என்பவற்றின் இணை அனுசரனையில் இடம்பெற்றது.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியால மண்டபத்தில் வியாழக்கிழமை (27) ஏறாவூர் நகர சபையின் செலாளரும் விஷேட ஆணையாளருமான எம். எச்.எம்.ஹமீம் தலைமையில் நடைபெற்ற இவ் விழிப்பூட்டும் செயலமர்வில், நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலை சூழலை சுத்தமாக வைத்திருப்பதோடு நாளாந்தம் சேருகின்ற திண்மக் கழிவுகளை முறையாகவும் பாதுகாப்பாகவும் அகற்றுவது தொடர்பில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## கல்முனை வலய தமிழ்த் தின போட்டி அங்குரார்ப்பண நிகழ்வு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்த் தின போட்டிகளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு, கல்முனை வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் மற்றும் தமிழ் பாட வளவாளர் ஜெஸ்மி எம். மூஸா ஆகியோரது ஒருங்கிணைப்பில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் திங்கட்கிழமை (31) ஆரம்பமானது.

இதில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அரங்கேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை தமிழ், கல்முனை முஸ்லிம் ஆகிய ஐந்து கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் போட்டி நிகழ்சிகளில் கலந்து கொண்டனர்.

எழுத்தாக்க போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் இங்கு அதிதிகளினால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வின் போது வலயக்கல்வி பணிப்பாளரின் சேவையை பாராட்டி கல்முனை உவெஸ்லி பாடசாலை அதிபர் எஸ். கலையரசனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## விபசார விடுதி பிரதேச மக்களால் சுற்றி வளைப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் நெடுங்காலமாக மறைமுகமாக இயங்கி வந்த விபசார நிலையமொன்று திங்கட்கிழமை (31) அப்பிரதேச மக்களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

சுற்றி வளைப்பின் போது விடுதியில் விபசாரத்தில் ஈடுபட்ட இரு பெண்களை தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். இப் பெண்கள் 25,30 வயதுடையவர்கள் எனவும் அநுராதபுரம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இரு பெண்களையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கு பிரதிப் பொது முகாமையாளர் நசீலுக்கு சேவைநலன் பாராட்டு விழா

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி,ஓய்வு பெற்றுச் செல்லும் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் எந்திரி.எம்.எம். எம்.நசீலுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு, நீர் வழங்கல் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தின் ஏற்பாட்டில், திங்கட்கிழமை (31) நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மேலதிக பொது முகாமையாளர் எந்திரி. என். சுதேசன், கௌரவ அதிதிகளாக உதவிப் பொது முகாமையாளர்களான கே.விநோதன், டீ.ஏ.பிரகாஷ், பிராந்திய முகாமையாளர்களான யூ.கே.எம்.முஸாஜித், எம். குமாரதாஸ், கபில பெரேரா, பிரதம பொறியியலாளர்கள், சிரேஷ்ட பொறியியலாளர்கள், கணக்காளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிழக்கு மாகாண மூவின மக்களுக்கும் சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக எவ்வித தடையும் இன்றி வழங்குவதற்கும், அரசின் கொள்கைக்கு ஏற்ப நீர்ப் பாவனையாளர்களின் தேவையறிந்து, புதிய நீரிணைப்புக்களை துரிதமாக வழங்குவதற்கு முன்னோடியாக இருந்தமைக்குமாக இவரின் சிறந்த சேவையையும், பணியையும் பாராட்டி அக்கரைப்பற்று, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று பிராந்தியங்களின் உத்தியோகத்தர்களினால் இவர் பொன்னாடை, ஞாபக சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## அம்மன் புகழ்பாடும் இறுவெட்டு வெளியீடு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்திலுள்ள இருட்டுச் சோலைமடுவில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார், சிவமுத்து மாரியம்மன் ஆலத்தில், அம்மன் புகழ்பாடும் இறுவெட்டு வெளியீடு நிகழ்வு திங்கட்கிழமை (31) மிக சிறப்பாக இடம்பெற்றது.

யூட் நிரோசனின் இசையில் இப் பக்தி காவியங்கள் அமையப் பெற்றுள்ளன. இந் நிகழ்வில் மந்திர சக்கரவத்தி சிவஸ்ரீ கு.தேவராசா குருக்கள், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், முன்னாள் மாநகர முதல்வர் தி.சரவணபவன், பல்கலைக் கழக விரிவுரையாளர்களான மேகராசா மற்றும் மோகனதாஸ், ஆலய நிருவாகத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு இறுவெட்டினை வெளியிட்டு வைத்தனர்.

## குற்றவியல் துறையில் முதுமாணி பட்டம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)



மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் குற்றவியல் நியாயமும் நிர்வாகமும் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இப் பட்டத்தை வழங்கியுள்ளது.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி கற்று, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட என்.எம். அப்துல்லாஹ், 1996ம் ஆண்டு சட்டமாணி பட்டம் பெற்று 1997ம் ஆண்டு சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அதனைத் தொடர்ந்து 2003ம் ஆண்டு நீதவானாகப் பதவியேற்ற அவர், 2018ம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியானார். இவ்வாறான நிலையில் அவர் தற்பொழுது முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

## மல்வத்தையில் மக்கள் பிரகடனம் வெளியீடு

(காரைதீவு குறூப் நிருபர் )



சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தீர்வினை வழங்க வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் (31) திங்கட்கிழமை மல்வத்தையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் மக்கள் ஒன்றுகூடி மல்வத்தை சித்தி விநாயகர் ஆலயமருகில் வைத்து மக்கள் பிரகடனத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தனர்.

மக்கள் 13 ஆவது திருத்தம் மற்றும் சமஷ்டி தொடர்பிலான பல பதாகைகளை தாங்கிய வண்ணம் குரல் எழுப்பினர்.

இதன்மூலம் தமிழ்பேசும் மக்கள் உட்பட வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி சமைக்கும் "எனவும் இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தெரிவித்தார்.

## வகுப்பறை கையளிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் கொமர்சியல் வங்கியின் பங்களிப்புடன் 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக, ஸ்மார்ட் வகுப்பறை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எஸ்.ஈ.ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், கல்முனை கொமர்சியல் வங்கி கிளையின் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பாலம் அமைக்குமாறு கோரிக்கை

(தோப்பூர் தினகரன் நிருபர்)



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சாபி நகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வேத்தீவு எனும் இடத்திலுள்ள மக்கள், தினமும் வேதத்தீவு ஆற்றை கடந்தே பயணம் செய்வதாக கூறுகின்றனர். இங்குள்ள மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் பாதையிலேயே பயணிப்பதாகவும், இதனால் தாம் பெரிதும் சிரமப்படுவதாக கூறும் மக்கள், வேத்தீவு ஆற்றிற்குக் குறுக்கே நிரந்தர பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஷுஹதாக்கள் தினம் நாளை அனுஷ்டிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையின் 33வது வருட ஷுஹதாக்கள் தினம் ஆகஸ்ட் 03ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் (31) திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ் வேண்டுகோளை விடுக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் ரவூப் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற சந்திப்பில், சம்மேளன உறுப்பினர்கள், காத்தான்குடி வர்த்தக சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106**

**கார்கள் விற்பனைக்கு**

CAG-0619 Micro Panda, 2015, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 046933

**118**

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

KK-5446 Hyundai Santa Fe, 2008, Jeep கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 046907

**119**

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

GJ-4442 Nissan Atlas, 1997, Lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 046922

62-5103 Nissan, 1992 bus கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 046920

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

JR-6297 Bajaj, 2004, YD-6606 Bajaj, 2010, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 070 5 999163. 046925

YV-8540 Bajaj, 2012, YY-7946 Bajaj, 2012, Threew h eel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 046928

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.06.07 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு சமன் W. ஹபுவத்த அத்தாட்சிப்படுத்திய 2012.11.19 திகதியிட்ட ஈட்டுமுறி இல.22657 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டிலானி உபேக்ஷா மனோதர அத்தாட்சிப்படுத்திய 2017.10.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2295 ஆகியவற்றின் பேரில் மாவத்தகம குருணாகல வீதி இல 147/3 ஐச் சேர்ந்த ரத்நாயக்க முதியான்சேலாகே மணிக்ராலகே குணரத்ஹாமி ரத்நாயக்க என்பவரிடமிருந்து கடன் மீது 2023.04.18 வரை முதலும் வட்டியும் இருபத்து மூன்று மில்லியன் இருநூற்று தொண்நூறாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய்களும் பதினாறு சதங்களும் (ரூ. 23,290,152.16) அத்துடன் கடன் முதல் நிலுவை பதினாறு மில்லியன் அறுநூற்று எழுபது ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்பது ரூபாய்களும் அறுபத்து மூன்று சதங்கள் (16,670,929.63) மீது 2023.04.19 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை பதினெட்டு (18%) வீதத்தில் மேலும் வடடியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு சமன் w.ஹபுவத்த அத்தாட்சிப்படுத்திய 2012.11.19 திகதியிட்ட ஈட்டு இல.22657 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டிலானி உபேக்ஷா மனோதர அத்தாட்சிப்படுத்திய 2017.10.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல 2295 ஆகியவற்றின் பேரில் கடன் மீது இருபத்து மூன்று மில்லியன் இருநூற்று தொண்நூறாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய்களும் பதினாறு சதங்களும் (ரூ. 23,290,152.16) மீது 2023.04.19 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3,விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்னவுக்கும் மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21க்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி அநுராதபுர மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வட மேல் மாகாணம் குருணாகல் மாவட்டம் குருணாகல் பிரதேச செயலாளர் பிரிவில் திரகங்தாஹகோரளை வேஉடவில்லி பற்றுவில் குருணாகல் மாநகர சபை எல்லைகளுள் குருணாகல நகர உடவல்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.842ல் உடவல்பொல கிராமத்தில் முன்னர் சேர்கியுலர் வீதி தெற்கு எனப்படும் உடவல்பொல வீதியில் அமைந்த தற்சமயம் வரிமதிப்பு இல 45ஐக் கொண்ட முன்னர் வீஹேன கனத்த மற்றும் தங்கஹ முலவத்த (சுருக்கமாக தங்ஹேன கனத்த என குறிப்பிட்டிருக்கும்) மற்றும் பின்பு சென் கிலெயார் என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் D சிவஞானசுந்தரம் தயாரித்த 1973 ஜூலை 26 திகதியிட்ட வரைபடம் இல1440 இல் காணித்துண்டு இல.01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்டதும் விபரிக்கப்படுவதுமான காணித்துண்டு வடக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S.T குணசேகர தயாரித்த 1963.12.02 திகதியிட்ட வரைபடம் இல3115இல் சிந்தாமணி ராணி வீரசேகர திருமணத்துக்கு முன்பு குணரத்ன என்பவருக்கு உரித்தான காணித்துண்டு இல.01 உம் கிழக்கில் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல 1440 இல் காணித்துண்டு 02உம் தெற்கில் உடவல்பொல வீதி முன்னர் சேர்கியுலர் வீதி தெற்கும் தெற்கிலும் மேற்கிலும் U.B வண்ணிநாயக்கவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சுகள்(ஏ.0 றூ. 0 பே39.5) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக் காணி குருணாகல் காணிப்பதிவகத்தில் G 172/122 ல் பதிவுசெய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**H.M.G.R விஜேவர்தன**
**பிரதான முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**அநுராதபுரம்.**
**2023.06.19**

தலைமை அலுவலகம், BOC சதுக்கம். BOC

## மாவட்ட செயலகம், அம்பாறை

**2022/23 பெரும் போகத்தில் அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை அரிசியாக மாற்றி விற்பதற்கு பொருத்தமான கொள்வனவாளர்களைத் தெரிவு செய்தல்**

## விலைமனுக்கோரல்

2022/23 பெரும் போகத்தில் அரசின் மூலம் நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நெல்லைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அரிசியை விற்பதற்குப் பொருத்தமான கொள்வனவாளர்களிடம் 2023 ஆகஸ்ட் 02 திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் 16 திகதி வரை மு.ப. 10.00 வரை கீழே குறிப்பிட்ட 05 பெறுகை செயற்றிட்டங்களின் கீழ் என்னால் விலை மனுக் கோரப்படுகின்றது.

| செயற்திட்ட இலக்கம் | விபரம் | அரிசி வகை | உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அரிசியின் அளவு (மெ.டொ) |
|---|---|---|---|
| செயற்றிட்டம் 01 | திருக்கோவில், பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, கல்முனை வடக்கு, சம்மாந்துறை மற்றும் இறக்காமம், ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற அரிசி இருப்புக்களை விற்பனை செய்தல். | வெள்ளை அரிசி | 11.9 |
| | | சிவப்பு அரிசி | 946.4 |
| | | மொத்தம் | 958.3 |
| செயற்றிட்டம் 02 | அம்பாறை பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற அரிசி இருப்புக்களை விற்பனை செய்தல் | வெள்ளை அரிசி | 64.7 |
| | | சிவப்பு அரிசி | 1508.2 |
| | | மொத்தம் | 1572.9 |
| செயற்றிட்டம் 03 | தமன பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற அரிசி இருப்புக்களை விற்பனை செய்தல். | வெள்ளை அரிசி | 49.1 |
| | | சிவப்பு அரிசி | 1298.0 |
| | | மொத்தம் | 1347.1 |
| செயற்றிட்டம் 04 | உஹன பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற அரிசி இருப்புக்களை விற்பனை செய்தல். - 1 | வெள்ளை அரிசி | 99.0 |
| | | சிவப்பு அரிசி | 1165.9 |
| | | மொத்தம் | 1264.9 |
| செயற்றிட்டம் 05 | உஹன பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற அரிசி இருப்புக்களை விற்பனை செய்தல் -11 | வெள்ளை அரிசி | 116.3 |
| | | சிவப்பு அரிசி | 881.3 |
| | | மொத்தம் | 997.6 |

மேற்படி ஒவ்வொரு செயற்றிட்டத்தின் கீழ் அரிசி இருப்புக்களை கொள்வனவு செய்வதற்கு வெவ்வேறாக விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், ஒரு விண்ணப்பத்திற்கு மீளச் செலுத்தப்படாத வைப்பு ரூ.5000.00 ஆகும். இது தொடர்பாக மேலதிகத் தகவல்கள் எமது உத்தியோகபூர்வ இணையத் தளத்திற்கு பிரவேசித்து அல்லது கீழே குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை விடுத்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

**இணையத்தளம் : www.ampara.dist.gov.lk**

**தொலைபேசி இலக்கம் : 063-2224269/063-2224458**

**சின்தக அபேவிக்ரம,**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**அம்பாறை மாவட்டம்.**




## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## INVITATION FOR BIDS

### TRCSL இன் வைரஸ் பாதுகாப்பினை மேம்படுத்தல்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL), இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 இல் வைரஸ் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக ஆணைக்குழு வழங்கல் சபை திணைக்கள தலைவரால் (மேஜர்) கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமான ஆவணமொன்றை TRCSL இன் நிர்வாக மற்றும் மனிதவள பிரிவில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.2000 ஐ வார நாட்களில் **மு.ப 9.00** மணி முதல் **பி.ப 3.00** மணி வரை **2023.08.23** ஆம் திகதி வரை சமர்ப்பிப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"TRCSL இன் வைரஸ் பாதுகாப்பினை மேம்படுத்தல்"** என குறிப்பிட்டு தலைவர், திணைக்கள வழங்கல் சபை (மேஜர்), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 க்கு **2023.08.24** ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலமாக அனுப்பவும் அல்லது TRCSL இன் நிர்வாக மற்றும் மனிதவள பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடவும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்கள வழங்கல் சபை (மேஜர்)**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை**
**கொழும்பு - 08**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

# ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலய தீமிதிப்பு நிகழ்வு

மட்டக்களப்பு விஷேட நிருபர்



மட்டக்களப்பு ஏ றாவூர் காட்டுமாஞ் சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கின் இறுதிநாள் தீமிதிப்பு வைபவம் செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்றது. தீமிதித்தலைத் தொடர்ந்து சர்க்கரை அமுது படைத்தல், காத்தான்மார் கன்னிமார் வழிபாடு, செவ்வாட்டம், நோர்ப்பெறிதல் என்பனவற்றுடன் திருச்சடங்கு நிறைவு பெற்றது.

கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு விஸ்வப்பிரம்மஸ்ரீ கு.வாமதேவன் ஐயா தலைமையில் உதவி உபாசகர்களினால் நடாத்தப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு, தங்களது நேத்திகளை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் சுயதொழில் விற்பனைக் கண்காட்சி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால், உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனையும் கண்காட்சியும், உதவி பிரதேச செயலாளர் பிரசாந்தன் தலைமையில், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் திங்கட்கிழமை (31) இடம்பெற்றது.

இக் கண்காட்சியில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இக் கண்காட்சி வருடம் தோறும் மூன்று அல்லது நான்கு தடவைகள் நடைபெறுவது வழக்கம். இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நிறைவான சந்தை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதுடன், பிரதேச சிறு தொழில் முயற்சியாளர்கள் பயன் பெறுவதையும் அவதானிக்கலாம்.

# குர்ஆன் மத்ரஸா பட்டமளிப்பு விழா

திராய்க்கேணி தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை யு.கே. இஸ்மாயில் பவுண்டேஷன் அமைப்பினால் நடத்தப்பட்டு வந்த குர்ஆன் மத்ரஸாவின் பட்டமளிப்பு விழா, அவ் அமைப்பின் தலைவர் கே.எம். சுபைர் (முன்னாள் அதிபர்) தலைமையில், அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலை கேட்பார் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது. கற்கை நெறிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஏ. சி. முகம்மது மௌலவி, ஏனைய அதிதிகளாக யூ. எல் . எம். நியாஸ் மௌலவி, எம்.நசீர் மௌலவி மற்றும் அமைப்பின் செயலாளர் எஸ். சுலைமாலெப்பை ஆசிரியர், மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2023.08.03, 2023.08.04ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடை பெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.10.12ஆம் திகதி G 2301/36 மற்றும் 2022.09.15ஆம் திகதி G 2297/55 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | குருநாகல் | |
| பிரதேச செயலாளர் பிரிவு | | பொல்பித்திகம | |
| கிராம சேவகர் பிரிவு | | 358 நியதவனய | |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல. | | DIVPP/LND/LA/ACQUI/3-2/358/9 4-3/10/2019-MV/465-E | |
| **வரைபட இல.** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல.** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| இ.கி.வ. இலக்கம் 2864 இல் பிற்சேர்க்கை இல. 3, தாள் இலக்கம் 4 | மொரகொட | 223,227-230,234,237,239,240,243,245, 246,248,249,251,253,254,256,257,259, 262,263,265,268,271,274,277-280,282, 283,285,288,290,295 வரை | 2.1661 ஹெக்டயார் |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல. | | DIVPP/LND/LA/ACQUI/3-2/358/8 4-3/10/2019-MV/465-E | |
| **வரைபட இல.2** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல.** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| இ.கி.வ. இலக்கம் 2865 இல் பிற்சேர்க்கை இல. 5, தாள் இலக்கம் 6 | பொத்துவ பிட்டிய | 298,299,301,304,306,309,311,314,315, 317-319,321,325,326,328,334,337-344, 346,349,350,352,354,355,357-359,361-372,374,377,379-382,367,389,391, வரை | 4.9363 ஹெக்டயார் |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**பொல்பித்திகம**
திகதி: 2023.07.28

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.06.07 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி.டிலானி உபேக்ஷா மனோதர அத்தாட்சிப்படுத்திய 2019.03.28 திகதியிட்ட வைப்பாவண ஈட்டுமுறி இல. 2568 இன் பேரில் அநுராதபுரம், கல்குளம, கவரக்குளம, கண்டி வீதியில் அமைந்த திருவாளர்கள்.ரண்வலி ரிசோர்ட் என்னும் நிறுவனத்திடமிருந்து கடன் மீது 2023.03.28 வரை முதலும் வட்டியும் பதினாறு மில்லியன் இருநூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து இரண்டு ரூபாய்களும் தொண்ணூற்று இரண்டு சதங்களும் (ரூ. 16,296,972.92) அத்துடன் கடன் முதல் நிலுவை பன்னிரெண்டு மில்லியன் முந்நூற்று ஐம்பத்தொரு ஆயிரத்து இருநூறு ரூபாய்கள்( 12,351,200.00 மீது 2023.03.29 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் (15.50%) வீதத்தில் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி.டிலானி உபேக்ஷா மனோதர அத்தாட்சிப்படுத்திய 2019.03.28 திகதியிட்ட வைப்பாவண ஈட்டுமுறி இல. 2568 இன் பேரில் அநுராதபுரம், கல்குளம, கவரக்குளம், கண்டி வீதியில் அமைந்த திருவாளர்கள்.ரண்வலி ரிசோர்ட் என்னும் நிறுவனத்திடமிருந்து (ஏக உரிமையாளர் திரு.W.M.Tஅஷேன் வீரசேகர) கடன் முதல் நிலுவை பதினாறு மில்லியன் இருநூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து இரண்டு ரூபாய்களும் தொண்ணூற்று இரண்டு சதங்களும் (ரூ. 16,296,972.92) அத்துடன் 2023.03.29 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3,விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்னவுக்கும் மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21க்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி அநுராதபுர மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

1. காணியின் விபரங்கள்

அ. மாவட்டம் : அநுராதபுரம்
ஆ: பிரதேச செயலாளர் பிரிவு : நுவரகம் பலாத்த கிழக்கு
இ. கிராம உத்தியோகத்தர் பிரிவு : இல. 275, கவரக்குளம
ஈ. கிராமம் அல்லது நகரம் : கவரக்குளம, மஹவன்னம்மடுவ, பொனிமான்குளம, தம்மன்னாவ
உ. வீதி : -
ஊ. வரிமதிப்பு இல. : ஒன்றுமில்லை
எ. கடெஸ்றல் பட இல. : 110186
ஏ. காணித்துண்டு இல. : 06
ஒ. காணித்துண்டுகள் எண். : 0010
ஓ. கூட்டாதிக்க ஆதனமாயின் கூறுகளின் எண். : -
ஔ.ஈட்டுக்கமைய விஸ்தீரணம் ஹெக்கடயர் : 0.2697

முற்பதிவு தொடர்புக் குறிப்பு
அ. பதிவு செய்த இடம் : அநுராதபுரம்
ஆ. உரிமைச் சான்றிதழ் இல. : 00250053392- அநுராதபுரம்
இ. உரிமை வகுப்பு : முதலாவது

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி

H.M.G.R விஜேவர்தன
பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி
மேற்தரக் கிளை
அநுராதபுரம்.
2023.07.04

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (VOICE COMMUNICATION SYSTEM) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/04)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (VOICE COMMUNICATION SYSTEM) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/04) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு உரிமங்கள் மற்றும் மென்பொருள் சகிதம் PABX மற்றும் MDF வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.
   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM1 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 7 வருடங்களில் 5 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான ஒரு ஒப்பந்தம் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 7 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 18 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 7 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.15ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 15,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து 'கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (VOICE COMMUNICATION SYSTEM) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/04) எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 70,000.0 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.02.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023.09.14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.
    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**கீழ் நிலை பெறுகைக் குழு -A,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (HVAC) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01 ) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு BMS வசதிகள் சகிதம் பொறிமுறை காற்றோட்டம் மற்றும் வளிச்சீராக்கிகளை வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.
   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM1 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 10 வருடங்களில் 120 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc. drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 10 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 480 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 170 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.11ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து 'கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01), எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 1,700,000.0 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.02.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023.09.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.
    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (PUBLIC ADDRESSING & PIPE MUSIC SYSTEM) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/02)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடம் நிர்மாணித்தல் - மின்னியல் (PUBLIC ADDRESSING & PIPE MUSIC SYSTEM) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/02 எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு PUBLIC ADDRESSING மற்றும் PIPE MUSIC முறைமையை வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.

   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM4 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்).
   - கடந்த 7 வருடங்களில் 5 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 7 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 18 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
இப்பெண் வீட்டில் ஒன்று சேர்த்து வைத்திருந்த அழுக்குகளை திக்குவல்லை பிரதேச சபைக்குச் சொந்தமான டிரக்டருக்கு ஒப்படைத்து விட்டு, மீண்டும் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இவ்விபத்து நிகழ்ந்தது. மாத்தறையிலிருந்து அம்பாறை நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியில் மோதுண்டு இப்பெண் வீசி எறியப்பட்டார். பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், பிரதேசவாசிகள் திக்குவல்லை வைத்தியசாலைக்கு இப்பெண்ணை எடுத்துச் சென்றனர். இந்நிலையிலே, அவர் அங்கு உயிரிழந்தார்.

மரண பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திக்குவல்லை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



"றிஸ்லி முஸ்தபா சமுக சேவை அமைப்பின்" நிதியுதவி மூலம் தெகியத்தக் கண்டி இந்துசார் பிள்ளைகள் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி இல்லத்திற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன்,மலசலகூடங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன. இவ்வில்ல நிருவாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு விஜயம் செய்த அமைப்பின் ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா இவற்றை வழங்கி வைத்தார். *(பாலமுனை தினகரன் நிருபர்)*


# கூட்ட அழைப்பிற்கான அறிவித்தல்

**அனைத்து அங்கத்தவர்களுக்கும்,**

**59 வது விசேட பொதுச் சபைக் கூட்டம்**
**2023.08.26**

எமது சங்கத்தின் 59 வது விசேட பொதுச் சபைக் கூட்டம் 2023 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமையன்று மு.ப.9.00 மணிக்கு கொழும்பு 03, வேல்ஸ் குமார வீதி இலக்கம் 56 இல் அமைந்துள்ள சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கின் வளாகத்தில் நடைபெறவுள்ளதனால் அதற்காக கலந்துகொள்ளுமாறு அறியத்தருகின்றோம். தங்களின் பிரேரணைகள் இருப்பின் 2023.08.11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் எனக்கு கிடைக்கப் பெறச் செய்யவும்.

இப்படிக்கு,

**பணிப்பாளர் சபை உத்தேசத்தின் படி டபிள்யூ.ஏ.டி.விமலரத்ன செயலாளர்**
**வ/ப சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம்**
**37/36, பன்சலை வீதி, கொழும்பு 10**

**2023 ஆகஸ்ட் மாதம் 02 திகதி**



**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு**

# ஆலோசனைகள் கோரலுக்கான விலைமனு (RFP)

## சர்வதேச போட்டி கேள்வி கோரல்

| திகதி | 2023 ஒகஸ்ட் 02 |
|---|---|
| தலைப்பு | ஒவ்வொரு கிலோமீற்றர் கட்டண செலுத்துகை அடிப்படையில் பயனிகள் போக்குவரத்துக்காக முழு பற்றரி மின்சாரத்திலான வளிச்சீராக்கப்பட்ட 50 எண்ணிக்கையிலான பஸ்களை வழங்குதல், பராமரித்தல் மற்றும் சார்ஜ் செய்தலுக்கு ஓர் வழங்குநரின் பெறுகைக்காக ஆலோசனைகளைக் கோரல் (RFP) |
| விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2023 செப்டம்பர் 12ம் திகதி 14.00 மணி (இலங்கை நேரம்) |

1. மேற்படி ஒப்பந்தத்திற்காக தகைமையான விலைமனுதாரர்களிடமிருந்து போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு (‘தொழில் தருநர்’) பொறியிடப்பட்ட ஆலோசனைகளை அழைக்கின்றார். கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் இலங்கைப் போக்குவரத்து சபையின் சேவையில் தினமும் ஈடுபட வைப்பதற்காக நிரப்புப் உட்கட்டமைப்புக்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் பஸ்களை சார்ஜ் செய்தல் உள்ளடக்கியதாக ஒவ்வொரு கிலோ மீற்றர் கட்டளை அடிப்படையில் 50 எண்ணிக்கையான மின்சார பற்றரி பஸ்கள் செயற்பாட்டின் நோக்கத்தில் உள்ளடக்கப் படுகிறது.

   பற்றரி மின்சார பஸ் இயக்கத்திற்கு பொருந்தக் கூடிய சம்பந்தப்பட்ட கைத்தொழில் மற்றும் சுற்றாடல் தரத்திற்கு இசைவானதாக சகல செயற்பாடுகளும் நடத்தப்படல் வேண்டும்.

2. தனி கட்டப் இரட்டை கடித உறை விலைமனு முறைமைக்கு அமைவாக சர்வதேச போட்டி விலைமனுக்கள் நடாத்தப்படும். அத்துடன் விலைமனு ஆவணங்களில் விபரிக்குப்படுமாறு எல்லா விலைமனுதாரருக்கும் திறக்கப்பட்டிருக்கும்.

3. கீழ்க்காணும் பிரதான தகைமைகளைக் கொண்டுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுவில் கலந்து கொள்ளலாம்.

   (i) விலைமனுதாரர் மின்சார பஸ் உற்பத்தியில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது இப் பெறுகையில் கலந்து கொள்வதற்கு உற்பத்தி அதிகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   (ii) இப்பெறுகையில் கலந்து கொள்வதற்கு விலைமனுதாரரின் நிதி மற்றும் தொழில் நுட்பத் திறன்களை நிருபித்தல் வேண்டும்.

4. தகைமையான விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.

   **பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்),**
   **போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
   **7ம் மாடி,**
   **செத்சிரிபாய கட்டம் II,**
   **பத்தரமுல்ல, இலங்கை.**
   **தொலைபேசி: 011-2187206**
   **மின்னஞ்சல்: secmintransport@gmail.com**
   **இணையதளம்: www.transport.gov.lk**

5. (ஆங்கில) மொழியிலான விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கவும், கொள்வனவு செய்யவும் தகைமையான விலைமனுதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டியது.

   **தலைவர்,**
   **இலங்கை போக்குவரத்து சபை,**
   **இல. 200, கிருல வீதி, நாரஹேன்பிட்ட.**
   **இலங்கை.**
   **தொ.பே. 011-2368111/011-2187206**
   **மின்னஞ்சல்: chairman@sltb.lk**
   **இணையத்தளம்: www.sltb.lk**

   (i) ஓர் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 100, 000.00 அல்லது அமெரிக்க டொலர் 305,000 காசாக அல்லது இலங்கை யூனியன் பிளேஸ் மக்கள் வங்கி கணக்கு இல. 01410013112836 இலங்கை போக்குவரத்து சபை தலைவர்கள் பெயரிலான வங்கி வரைவு மூலம் செலுத்துவதன் பேரில் ஆ. கோரல்களை கொள்வனவு செய்யமுடியும்.

   விலைமனு ஆணங்கள் 2023 ஒகஸ்ட் 2 முதல் 2023 செப்டம்பர் 12 வரை மேற்படி 5ஆம் பந்தியின் கீழான முகவரியில் 9.00 மணி முதல 15.00 மணி வரை சாதாரண வேலை நாட்களில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

6. விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்படும் விலைமனுப் பினையுடன் 2023 செப்டம்பர் 12ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு ஆலோசனைகளை விநியோகித்தல் வேண்டும். தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேரம் பேசும் குழு (CANC).

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ஆம் மாடி,**
**‘செத்சிரிபாய கட்டம் II,**
**பத்தரமுல்ல, இலங்கை.**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கைத் துறைமுக அதிகார சபை**

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (LV) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/LV/01)**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (LV) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/LV/01) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு குறைந்த மின்னழுத்தமுள்ள சுவிட்ச் கியர்கள் சகிதம் மின்சார பெனல்கள் உட்பட குறைந்த மின்னழுத்த மின்சார முறைமை புவித்தொடுப்பு (Earthing) மின்னல் பாதுகாப்பு முறைமை மற்றும் தேவையான துணை முறைமைகள் சகிதம் குறைந்த மின்னழுத்த கேபிள்கள் என்பவற்றை வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.

   நிர்மாணக் காலம் 60 நாட்களாகும்
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM1) தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 7 வருடங்களில் 50 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 7 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 180 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 60 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ‘கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (LV) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/LV/01) எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 600,000.0 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.01.31ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 60 நாட்களாகும்.
11. 2023.09.06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.

    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கைத் துறைமுக அதிகார சபை**

**கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – மின்னியல் (CCTV SYSTEM, ACCESS CONTROL AND SMART TV) வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/03**

1. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (CCTV SYSTEM, ACCESS CONTROL AND SMART TV) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/03 எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு தேவையான துணை முறைமைகள் சகிதம் CCTV SYSTEM, ACCESS CONTROL AND SMART TV முறைமையை வழங்குதல். நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.

   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது EM3/ EM4 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்கார்கள்
   - கடந்த 7 வருடங்களில் 10 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான ஒரு ஒப்பந்தம் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ் நிலை (Online) மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன
   - கடந்த 7 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 30 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது/ மற்றும் கடன் வசதிகள் 10 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.08.15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம் பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு -01. இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023.08.03ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ‘கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (CCTV SYSTEM, ACCESS CONTROL AND SMART TV) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/ELV/03) எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 120,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறி 2024.02.07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023.09.13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு -01 இல. 45 லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக் கொள்ளலாம்.

    மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு -01.**

## சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல்

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பாவிக்கப்பட்ட கீழ்க்காணும் மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதற்காக 2023.08.02ம் திகதி மு.ப.10.00 (10.00 மணி) முதல் 2023.08.24 மு.ப.10.00 (10.00மணி) வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| லொட் இல | வாகன இலக்கம் | மொடல் | வகை | ஏல விற்பனை மேற்கொள்ளும் விதம் | வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை நிறுவனம் |
|---|---|---|---|---|---|
| 1 | 19-xxxx | மிட்சுபிஷி | கார் | கழிவுகளாக | மெகசின் சிறைச்சாலை |
| 2 | 41-xxxx | இசூசு | லொறி | கழிவுகளாக | தும்பர சிறைச்சாலை |
| 3 | 19-xxxx | மிட்சுபிஷி | கார் | வாகனமாக | தும்பர சிறைச்சாலை |
| 4 | GD-xxxx | டாட்டா | பஸ் | வாகனமாக | களுத்துறை சிறைச்சாலை |
| 5 | 37-xxxx | பியெட் | கை டிரக்டர் | கழிவுகளாக | மஹர சிறைச்சாலை |
| 6 | 300 - xxxx | மிட்சுபிஷி | கார் | வாகனமாக | மஹர சிறைச்சாலை |
| 7 | 202 - xxxx | பஜாஜ் | முச்சக்கரவண்டி | கழிவுகளாக | வெலிக்கட சிறைச்சாலை |
| 8 | SE-xxxx | எக்ரோமெக் | கை டிரக்டர் | வாகனமாக | வெலிக்கட சிறைச்சாலை |
| 9 | 300-xxxx | மிட்சுபிஷி | கார் | வாகனமாக | கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலை |
| 10 | 62 - xxxx | அஷோக் லேலண்ட் | பஸ் | வாகனமாக | கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை |
| 11 | 63 - xxxx | அசோக் லேலண்ட் | பஸ் | வாகனமாக | பல்லெகெலே சிறைச்சாலை |
| 12 | 43 - xxxx | அசோக் லேலண்ட் | லொறி | கழிவுகளாக | பல்லெகெலே சிறைச்சாலை |
| 13 | 301 - xxxx | மிட்சுபிஷி | கார் | கழிவுகளாக | சிறைச்சாலை தலைமையகம் |
| 14 | GD - xxxx | டாட்டா | பஸ் | கழிவுகளாக | பதுளை சிறைச்சாலை |
| 15 | GD - xxxx | டாட்டா | பஸ் | கழிவுகளாக | பூசா சிறைச்சாலை |
| 16 | 60 - xxxx | டாட்டா | பஸ் | கழிவுகளாக | யாழ்ப்பாணம் சிறைச்சாலை |

06. 2023.08.02 முதல் 2023.08.23 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.10.00 (10.00 மணி) முதல் பி.ப.3.00 (15.00 மணி) வரை மேற்படி இடங்களில் வாகனங்களைப் பரீட்சிக்கலாம்.

07. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் விண்ணப்பங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை சிறைச்சாலை தலைமையகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவிலிருந்து விசாரித்த அறியலாம். (தொலைபேசி இலக்கம் - 0114341043)

08. ஒவ்வொரு வாகனம் சார்பாகவும் வேறுவேறாக ரூ.1000/- மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணமும், வாகன ஏலவிற்பனை செய்யப்படும் வாகனத்திற்கு ரூ.10,000/- உம், கழிவுகளாக ஏல விற்பனை செய்யப்படும் வாகனத்திற்கு ரூ.5000/- உம் ஆன, மீளளிக்கப்படும் வைப்புத் தொகையைச் செலுத்தி சிறைச்சாலை தலைமையக சொத்து முகாமைத்துவ பிரிவில் இருந்து அல்லது சம்பந்தப்பட்ட சிறைச்சாலை நிறுவனத்திலிருந்து 2023.08.23ம் திகதி பி.ப.3.00 (15.00 மணி) வரை குறித்த மாதிரியுடனான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட விண்ணப்பங்கள் 2023.08.24 மு.ப.10.00 (10.00 மணி) வரை மாத்திரம் ஏற்கப்படும்.

09. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்தல் வேண்டும்.

**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்**
**சிறைச்சாலைகள் திணைக்களம்**
**2023.08.02ம் திகதி**

**சிறைச்சாலைகள் திணைக்களம்**
**சிறைச்சாலைகள் தலைமையகம்**
**இல - 150, பேஸ்லைன் வீதி,**
**கொழும்பு - 09**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
சிறு ஏற்றுமதி பயிர் பெருந்தோட்ட அபிவிருத்தி பிரிவு

LSC

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் நிறுவனம்

## கேள்விக்கோரல் தொடர்பான அழைப்பு

**நிலையான நீர்ப்பாசன செயன்முறையை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான தேசிய போட்டி நடைமுறை கேள்விக்கோரல் - செவனகல சீனி ஆலை**

**கேள்வி தொடர்பான குறிப்பு LSCPL/SEV/P&M/2023/037**

வரையாறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனத்தின் திணைக்கள வழங்கல் சபைத் தலைவரால் செவனகல சீனி தொழிற்சாலைக்கு நிரந்தர நீர்ப்பாசன செயன்முறையை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான ஆர்வமுடைய தரப்பினர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விதாரர்கள், **2023 ஆகஸ்ட் 21ஆம் திகதி** வரையிலான வார நாட்களில் **காலை 9.00 மணி முதல் மாலை 15.00** மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.27,500/-** ஐ செலுத்தி வரையறுக்கப்பட்ட லங்கா **சீனி (தனி) நிறுவனம், இலக்கம் 27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04** என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் ஊடாக முழுமையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியன் மூலம் பெற்றுக்கொண்ட ரசீதினை கேள்வியுடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாதவிடத்து கேள்விகள் நிராகரிக்கப்படும்.
3. முத்திரையிடப்பட்ட கேள்விகளை கடித உறையிலிட்டு நேரில் வந்து ஒப்படைக்கவும் அல்லது குரியர் சேவை அல்லது பதிவுத்தபால் மூலமாக தலைவர், திணைக்கள வழங்கல் சபைத் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம், இலக்கம்.27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04 என்ற முகவரிக்கு **2023 ஆகஸ்ட் 22ஆம் திகதி 14.00 மணிக்கு** முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"நிரந்தர நீர்ப்பாசன செயன்முறையை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்விக்கோரல்"** எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் அவை திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். பிந்திக்கிடைக்கும் அல்லது முறையாக பூரணப்படுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல் தொடர்பான இறுதி முடிவு கேள்விச்சபையை சார்ந்ததாகும்.
4. வேலைத்தள பரிசீலனையை திங்கள் முதல் வெள்ளி வரை **மு.ப 8.00 முதல் பி.ப 4.00** மணி வரையில் மேற்கொள்ள திட்டமிடலாம்.
5. அனைத்து கேள்விகளும் திறக்கப்பட்ட தினத்திலிருந்து **119** நாட்கள் செல்லுபடியாக வேண்டியதோடு, 1,800,000.00 ரூபா (பதினெட்டு இலட்சம்) பெறுமதியான பிணைப் பாதுகாப்புடன் முன்வைக்கப்பட வேண்டும். உத்தேசிக்கப்பட்ட செலவு **120** மில்லியன் ரூபாவாகும்.
6. **2023 ஆகஸ்ட் 11ஆம் திகதி மு.ப 9.30** மணிக்கு செவனகல கேட்போர் கூடத்தில் கேள்விக்கு முந்திய கூட்டம் இடம்பெறும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வழங்கல் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம் **(தொ.பே +94 11 5 184 184, மொபைல் + 94 077 010 3359, பெக்ஸ் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk)** மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் வழங்கல் சபைத் தலைவர்
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம்,
இலக்கம் 27, மெல்பனர் எவினியு,
கொழும்பு 04.

---

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**உத்தேசிக்கப்பட்டுள்ள மரம் (பைனஸ்) வெட்டும் திட்டம் - பேரவத்த, மேற்கு கிராமசேவகர் பிரிவு, தெல்தோட்டை.**

ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கை (ஆசுஆ)

## இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

### தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ (4) இன் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை பூரண ஆய்வின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9 (I) இற்கமைவாக இல 21, 1/3, கிரேஸ்டர் பிரதேசம், கொழும்பு விலாசத்தைக் கொண்ட திரு.பி. புவனேந்திர குமார் அவர்களுக்கு, நடைமுறைபடுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச"**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை**
**பத்தரமுல்ல**

---

இலங்கை புகையிரத சேவைகள்

## வெற்று பெரல்களை அகற்றுவதற்காக விலை மனுக்களைக் கோர் (RFQ)

### ஒப்பந்த இல. SRS/F.7923

தற்போதுள்ள நிலையில் இலங்கை புகையிரத சேவையில் உள்ள வெற்று பெரல்களை அகற்றுவதற்காக கொள்வனவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) தலைவர் அழைக்கின்றார். எனினும் (இருக்கின்ற நிலை அடிப்படையில்) இந்த நிலைமை இருக்கும்.

ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 2000/- (இரண்டாயிரம் ரூபா) செலுத்துவதன் பேரில் 2023.08.16 பி.ப. 3.00 வரை கொழும்பு -10, ஓல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்.

**பிரதிப்பொது முகாமையாளர் (பெறுகை),**
**தொ.பே. இலங்கங்கள்: 94(11)2438078 அல்லது 94(11)2436818**
**பெக்ஸ் இல.: 94(11)2432044**
**மின்னஞ்சல்: tender2@railway.gov.lk**
**இணையம்: www.railawy.gov.lk**

K.A.B. பதிரத்ன
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),**
**பெறுகை உப திணைக்களம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

---

இலங்கை அரசாங்கம்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**

**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்**

**கடன் இல. Cr. 5685-lk & 9255-lk**

## விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ நீர் வழங்கல் திட்டத்திலுள்ள ஹெலமட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நானாவித வேலைகள் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/Kegalle/ NCB/RE/ Miscellaneous Works – Galigamuwa WSS/AF/2023/01** | ரூபா 12,500/- | ரூபா 504,000/- | C4 அல்லது C5 தரத்தில் CIDA நிறுவனத்தின் கட்டிட நிர்மாணத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஆகஸ்ட் 31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| இரத்தினபுரி மாவட்டத்தில் வெலிகேபொல கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மிகுதி நிர்மாண வேலைகள் II ஒப்பந்த இல. **MWS/WaSSIP/Ratnapura/ BW/ NCB/Weligepola - Balance Work/ AF/2023/01** | ரூபா 12,500/- | ரூபா 696,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தின் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஆகஸ்ட் 23ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு |
| இரத்தினபுரி மாவட்டத்தில் ரக்வானை சிறிய நகர புனரமைப்புத் திட்டத்தின் மிகுதி நிர்மாண வேலைகள் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/Ratnapura/ BW/NCB/Rakwana ST-Balance/ AF/2023/03** | ரூபா 12,500/- | ரூபா 888,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தின் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஆகஸ்ட் 23ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# லங்கா பிரீமியர் லீக் தொடருக்கு அமைச்சிடம் அனுமதி இல்லை

இந்த ஆண்டின் லங்கா பிரீமியர் லீக் தொடரை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை அல்லது லங்கா பிரீமியர் லீக்கின் உரிமையை வைத்திருப்பவர்கள் அனுமதி பெற தவறி இருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.



விளையாட்டு சட்டத்தின்படி எந்த ஒரு போட்டித் தொடரையும் நடத்துவதற்கு முன்னதாக எனது அனுமதியை பெறுவது அவசியமாக உள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1948 ஆம் ஆண்டு டன்கன் வைட் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தினத்தை, தேசிய விளையாட்டு தினம் என அறிவித்து அந்த தினத்தை கொண்டாடும் வகையில் மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (31) இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

“முந்தைய விளையாட்டு அமைச்சர்களின் கீழ் இந்தத் தொடர் எப்படி ஆடப்பட்டது என்பது எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் என்னிடம் அனுமதி கேட்கவில்லை. விளையாட்டு சட்டத்தின் ஏற்பாட்டுக்கு அமைய தொடருக்கு அனுமதி பெறும்படி கோரி இலங்கை கிரிக்கெட் சபைக்கு நான் இரு முறை எழுதிய போதும் அவர்கள் அதனை செய்யவில்லை.

இதனால் தான் எனக்கு அழைப்பு கிடைத்தபோதும் நான் தொடரின் ஆரம்ப நிகழ்வுக்கு செல்லவில்லை. இது இலங்கை கிரிக்கெட்டுக்கு மற்றொரு கரும்புள்ளியாகும்” என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நான்காவது முறையாக நடத்தப்படும் லங்கா பிரீமியர் லீக் தொடர் கடந்த ஜுலை 30 ஆம் திகதி ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்ப நிகழ்வுகளுடன் தொடங்கியது. கடந்த பல ஆண்டுகளாக லங்கா பிரீமியர் லீக் விளையாட்டு சட்டத்தை பின்பற்றுவதில்லை என்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

லங்கா பிரீமியர் லீக் விளையாடும் வீரர்களிடம் வரி ஒன்று அறவிடப்பட வேண்டும் என்றும் வெளிநாட்டு வீரர்கள் 20 வீதம் மற்றும் உள்நாட்டு வீரர்கள் 15 வீதம் என இந்த வரியை செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஆஸியை வீழ்த்தி ஆஷஸை சமன் செய்தது இங்கிலாந்து



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஆஷஸ் தொடரை 49 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி இந்த டெஸ்ட் தொரை 2–2 என சமநிலையில் நிறைவு செய்தது.

ஓவலில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு 384 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. போட்டியின் கடைசி நாளான கடந்த திங்கட்கிழமை (31) விக்கெட் இழப்பு இன்றி 135 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையிலேயே ஆஸி. அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது.

எனினும் கடைசி நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இதனால் ஆஸி. அணி 334 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்போது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவட் பிரோட் அவுஸ்திரேலிய அணியின் கடைசி இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தி கிரிக்கெட்டுக்கு விடை கொடுத்தார்.

இந்த டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 283 ஓட்டங்களை பெற்ற நிலையில் அவுஸ்திரேலிய அணி 295 ஓட்டங்களை குவித்தது. தொடர்ந்து இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 395 ஓட்டங்களை பெற்றது.

## வெண்கலம் வென்றார் றிஸ்மி மஜீட்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம்.ஏ.எம். றிஸ்மி மஜீட் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாமிடம் பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். அனுராதபுர பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியிலேயே இவர் திறமையை வெளிப்படுத்தி இருந்தார்.

## பாகிஸ்தான்–ஆப்கான் தொடர் இலங்கையில்



ஆசிய கிண்ண தொடருக்கு முன்னதாக இலங்கையில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகள் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுவது உறுதியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தான் நடத்தும் இந்த ஒருநாள் போட்டிகளின் முதல் இரு ஆட்டங்களும் ஹம்பாந்தோட்டையில் ஓகஸ்ட் 22 மற்றும் 24 ஆம் திகதிகளிலும் மூன்றாவது ஒருநாள் போட்டி கொழும்பில் ஓகஸ்ட் 26 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்த தொடரை தொடர்ந்து இரு அணிகளும் ஆசிய கிண்ண போட்டிகளில் ஆடுவதற்காக பாகிஸ்தான் செல்லவுள்ளன. முல்தானில் நடைபெறும் ஆசிய கிண்ண ஆரம்பப் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகள் வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி மோதவுள்ளன.

இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை அண்மையில் நிறைவு செய்த நிலையில் தலைவர் பாபர் அசாம் உட்பட கணிசமான பாகிஸ்தான் வீரர்கள் லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்று தொடர்ந்து இலங்கையில் தங்கியுள்ளனர். கடந்த ஜூலை 30 ஆம் திகதி ஆரம்பமான லங்கா பிரீமியர் லீக் ஓகஸ்ட் 20 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

'இலங்கையில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆடுவது எமது அணி (ஆசிய கிண்ண) போட்டிக்கான மைதானங்கள் மற்றும் தயார்படுத்தல்களுக்கு மேலும் உதவியாக இருக்கும்' என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் மிர்வைஸ் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப்:

## இலங்கை 400 மீ. அஞ்சலோட்ட அணி பங்கேற்பதற்கு வாய்ப்பு

ஹங்கேரியாவின் ‘புடாபேஸ்ட்’ நகரில் ஓகஸ்ட் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் 19ஆவது உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிக்கு 10 ஆண்டுகளின் பின் இலங்கையின் பரிந்துரை உறுதி செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் வீர, வீராங்கனைகளை உறுதி செய்வது கடந்த திங்கட்கிழமையுடன் (31) நிறைவடைந்தது.

இலங்கை 400 மீற்றர் அஞ்சலோட்ட அணி தாய்லாந்தில் நடைபெற்ற 25ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டியில் 3:01.56 நிமிடங்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றது. இதன் மூலம் இலங்கை அணிக்கு 400 மீற்றர் அஞ்சலோட்ட தரப்படுத்தலில் 12 ஆவது இடத்தை பிடிக்க முடிந்தது.



உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் முதல் 16 இடங்களில் உள்ள அணிகளே தகுதி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனுர தர்ஷன, ராஜித்த ராஜகருணா, பபசர நிகு மற்றும் காலிங்க குமாரகே ஆகிய நான்கு வீரர்களுமே ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் தங்கம் வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில் உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் மேலதிக வீரர் பசிந்து கொடிகார தவிர்த்து இந்த நான்கு வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

எனினும் சுகததாச விளையாட்டு அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) நிறைவடைந்த 101 ஆவது தேசிய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் இலங்கை மெய்வல்லுனர் அணி இந்திய அணியுடன் போட்டியிட்ட போது அதில் இரண்டாவது இடத்தையே பெற்றது.

புடாபேஸ்ட் உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் 400 மீற்றர் அஞ்சலோட்ட அணி தவிர இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் பிரியதர்ஷன அபேகோன் 100 மீற்றர் ஓட்டப் போட்டிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## தலிபான்கள் மற்றும் அமெரிக்கா இடையே உத்தியோகபூர்வ பேச்சு

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு திரும்பி இரண்டு ஆண்டுகளை எட்டி இருக்கும் நிலையில் தலிபான் தலைவர்கள் அமெரிக்க அதிகாரிகளை கட்டாரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.



இரண்டு நாட்கள் இடம்பெற்ற இந்த சந்திப்பில் தடைகள் மற்றும் பயணத் தடைகளை அகற்றுவது, வெளிநாட்டில் முடக்கப்பட்டிருக்கும் ஆப்கான் மத்திய வங்கியின் சொத்துகளை திரும்ப அளிப்பது உட்பட நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக ஆப்கான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை (31) தெரிவித்தார்.

இதில் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலும் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அந்த பேச்சாளர் தெரிவித்தார்.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் அந்த அரசை இதுவரை எந்த ஒரு நாடும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவில்லை.

20 ஆண்டுகள் நீடித்த போருக்குப் பின் அமெரிக்கா ஆப்கானில் இருந்து வாபஸ் பெறும்போது அந்நாட்டின் மேற்குலக ஆதரவு அரசு வீழ்ந்ததைத் தொடர்ந்தே 2021 ஓகஸ்டில் தலிபான்கள் ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றினர்.

ஆட்சிக்கு வந்ததை அடுத்து பெண்கள் கல்வி மற்றும் உரிமைகளை கட்டுப்படுத்தியது தொடர்பில் தலிபான்கள் சர்வதேச கண்டனத்திற்கு உள்ளாகி வருகின்றனர். ஆப்கான் மனிதாபிமான நெருக்கடியையும் சந்தித்து வருகிறது. அந்த நாட்டின் 23 மில்லியன் மக்கள் தொகையின் கிட்டத்தட்ட பாதி அளவானோர் உலக உணவுத் திட்டத்தின் உதவியை பெற்று வருகின்றனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நாட்டில் ‘மோசமடைந்து வரும்’ மனித உரிமைகள் பற்றிய தொழிநுட்பப் பேச்சுக்களுக்கு வொஷிங்டன் திறந்திருப்பதாக அதன் அதிகாரிகள் தலிபான்களிடம் கூறியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

இதில் பெண்களின் உயர் கல்வி மற்றும் பெண்கள் வேலைக்குச் செல்வதற்கு உள்ள தடையை நீக்கும்படியும் கைது செய்யப்பட்டிருக்கும் அமெரிக்கர்களை விடுவிக்கும்படியும் அமெரிக்க அதிகாரிகள் தலிபான்களை கேட்டுள்ளனர்.

## இரு குழந்தைகளை கொன்ற தாய்க்கு அயுள் தண்டனை

உலகம் அழிவதை காரணம் காட்டி தனது இரு குழந்தைகளையும் கொலை செய்தது மற்றும் தனது கணவரின் முன்னாள் மனைவியை கொலைசெய்ய சதி செய்த குற்றச்சாட்டில் அமெரிக்காவில் தாய் ஒருவருக்கு தொடர்ச்சியாக மூன்று ஆயுள் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.



தனது 16 வயது மகள் மற்றும் தத்தெடுக்கப்பட்ட ஏழு வயது மகனை கொலை செய்ததாக கடந்த மே மாதம் லொரி வலோ என்ற பெண் குற்றங்காணப்பட்டார்.

தம்மை தேவதை என்று குறிப்பிட்டிருக்கும் 50 வயதான வலோ, இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு தயார்படுத்தும் பணியை செய்வதாக தெரிவித்துள்ளார்.

வலோவின் குழந்தைகள் 2019 ஆண்டு காணாமல்போனதை அடுத்தே இந்த விவகாரம் அவதானத்தை பெற்றது. தொடர்ந்து இடாஹோவில் இருக்கும் வலோவின் கணவரது இடத்தில் 2020 ஜுன் மாதத்தில் இரு குழந்தைகளதும் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

## சீன முதலீடுகளுக்கு இந்தியாவில் இடம்

சீனாவின் முதலீடுகளுக்காக இந்தியா திறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



“சீனர்கள் உட்பட அனைத்து முதலீட்டாளர்களுக்காகவும் இந்தியா திறந்திருப்பதாகத் தெரிவித்துள்ள இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் ரஜீவ் சந்திரசேகர், எந்தவொரு நிறுவனத்துடனும் வர்த்தகம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், அவர்கள் தங்கள் முதலீடுகளையும் வர்த்தக நடவடிக்கைகளையும் சட்டபூர்வமாகவும், எமது நாட்டு சட்டங்களுக்கு அமைவாகவும் மேற்கொள்ளும் போது அதற்கு நாம் இடமளிப்போம்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் 2020 இல் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் உருவாகின. இந்த முறுகல்களுக்கு தீர்வு காணும் வகையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 2ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.